வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


வார மலர்




Email : news@eelanadu.lk மலர் : 06 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 61 பக்கங்கள் : 16

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் ஒன்றிணையவேண்டும்!

## ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்விடம் தமிழரசுவின் பதில் தலைவர் கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 02

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய நான்கு கட்சிகளும் தமிழ் இனத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர். எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக, தங்கள் மூவருடனும் கலந்துரையாடியது, ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தங்களது கட்சிகளும் எமது கட்சியும் இணைந்து ஒன்றாகப் போட்டியிட்டது போல இந்தத் தேர்தலிலும் சில இடங்களிலாவது ஒன்றாக போட்டியிடுவது பற்றி ஆராய்வதற்கே ஆனது.

இது சம்பந்தமாக கலந்துரையாட நாளைய திகதியை

15

## யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சேவைகள் வழமைக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 02

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ சேவைகள் கடந்த இரண்டு நாட்களின் பின்னர் நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளன.

வைத்தியர்களின் பணிப் புறக்கணிப்பினால், நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்நோக்கி இருந்த நிலையில் நேற்று முதல் வைத்தியர்கள் சேவைக்கு திரும்பியுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள்

15

## நாணய நிதியம் இலங்கைக்கு 336 மில்லியன் டொலர் கடன்!

### மூன்றாவது மதிப்பாய்வுக்கு பின்

கொழும்பு, மார்ச் 021

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு, 48 மாத கால நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் இலங்கையுடனான மூன்றாவது மதிப்பாய்வு நிறைவு செய்துள்ளநிலையில் இதன் மூலம், பொருளாதாரக் கொள் கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதற்காக, இலங்கைக்கு உடனடி நிதி

15

## அதானி குழுமத்தின் நிலைப்பாட்டை எழுத்துபூர்வமாக கோரியுள்ளது அரசு!

### மன்னார் காற்றாலை மின் திட்டம் குறித்து

கொழும்பு, மார்ச் 02

மன்னாரில் 442 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் உருவாக்கத் திட்டமிட்டிருந்த காற்றாலை மின் திட்டத்திலிருந்து விலகுவதாக இந்திய கூட்டு நிறுவனமான அதானி குழுமம் அறிவித்தபோதிலும், மேற்கோள் காட்டப்பட்ட கட்டணங்களில் இத்திட்டத்தை தொடர பேச்சுக்குத் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் கூறியிருந்த நிலையில், இத்திட்டத்தின் எதிர்காலம் குறித்த தனது நிலைப்பாட்டை எழுத்து பூர்வமாக தெரிவிக்குமாறு எரிசக்தி அமைச்சு அதானி நிறுவனத்திடம் கோரியுள்ளதாக

15

## வட்டுவாகல் விகாரைக்கு கீழே 2009இல் சரணடைந்தோர் கொல்லப்பட்டு புதைப்பு!

### ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு நீதி அமைச்சை கோரினார் ரவிகரன்

கொழும்பு, மார்ச் 02

கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, தற்போது முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையின்கீழ் பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாக மக்கள் பலரும் தம்மிடம் முறையிட்டுள்ளதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2025ஆம்

19

## புதிய அரசமைப்பில் சிங்களம், தமிழ் இரண்டும் அரசாங்க கருமமொழிகள்!

### மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 02

அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், புதிய அரசியலமைப்பில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரச கரும மொழிகளாக அறிவிக்கப்படவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நீதியமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15

## குழப்பத்தை உருவாக்கும் நோக்கில் எரிபொருள் தட்டுப்பாடு என வதந்தி!

### சபையில் சுட்டிக்காட்டியது அரசு

கொழும்பு, மார்ச் 02

நாட்டில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவு வதாக குழப்பத்தை உரு வாக்கும் நோக்கில் திட்ட மிட்ட வகையில் சில குழுவினரால் தகவல் பரப்பப்படுகிறது என தொழில் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து எதிர்க்கட்சியினரால் பாராளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் நிலையங்களில் சாதாரணமாக ஆயிரத்து 100அல்லது ஆயிரத்து

15

## தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாகிவிட்டார்!

### அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, மார்ச் 02

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாகியுள்ளார் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களம் முன்னாள் பொலிஸ்மா அதிபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் சிங்கப்பூரில் தலைமறைவாகியுள்ள அர்ஜுன மகேந்திரனையும் இலங்கைக்குக்

15




## மோடி - ரணில் சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 02

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடி னார். இந்த சந்திப்பு புதுடில்லியில் உலகளாவிய விசேட முன்னேற்றங்கள் குறித்த

15

## எரிபொருள் நெருக்கடியால் மக்கள் பெரும் நிர்க்கதியில்!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 02

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு அரசாங்கத்தோடு ஏற்பட்ட நெருக்கடியால் நாட்டு மக்கள் நிர்க்கதிகளுக்கு ஆளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், மதவச்சி, புல்எலிய, திபுல்வெவ வரலாற்று சிறப்புமிக்க கிரலாகல புராதன விகாரையின் விகாராதிபதி ஷப்த விஷாரத கச்சாயன வம்ஷாலங்கார சாசன கீர்த்தி ஸ்ரீ பிலியந்தல சுபோத தேரரின் ஆலோசனையின் பிரகாரம் அவ்விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட சரோஷிக செனவிரத்ன ஞாபகார்த்த சைத்திய, மகா சங்கத்தினரின் சமய ஆசீர்வாதங்களுக்கு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் எரிபொருள் நிரப்ப வரிசையில் நிற்கும் மக்கள்

## மீண்டும் வரிசை யுகமா என்று அச்சம்



யாழ்ப்பாணம், மார்ச்.02

**யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றுக்காலை முதல் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பெற்றோல் நிரப்பிச் சென்றனர். இதேவேளை, மீண்டும் வரிசை யுகம் ஏற்பட்டு விடுமோ என்று அச்சத்துடன் காணப்பட்டனர்.**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதுவரை பெற்று வந்த மூன்று சதவீத தள்ளுபடியை இரத்துச் செய்ய அரசாங்கம் எடுத்த முடிவை திரும்பப் பெறாவிட்டால், நாடு முழுவதும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெற்றோலிய ஒழுங்கு நடவடிக்கைகளிலிருந்து அந்தச் சங்கம் விலகியது.

இந்நிலையில், எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு மக்கள் வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிகின்றது. (எ- 05)

# கேரளக் கஞ்சாவுடன் கைதான இளம் சட்டத்தரணி குற்றவாளி

## மேன்முறையீட்டையடுத்து பிணையில் விடுவிப்பு

வவுனியா, மார்ச்.02

வவுனியாவில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளம் சட்டத்தரணி ஒருவரை குற்றவாளியாக அடையாளம் கண்ட நீதிமன்று அவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது.

கடந்த 2021ஆம் ஆண்டு வவுனியா செட்டிக்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் வைத்து இளம் சட்டத்தரணி ஒருவரிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, அவரது உடைமையில் கஞ்சா இருந்ததாக தெரிவித்து குறித்த சட்டத்தரணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. இந்த நிலையில், நேற்று முன்தினம் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அந்தவகையில் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் சட்டத்தரணியை குற்றவாளியாக அடையாளம் கண்ட நீதிமன்றம் அவருக்கு 10ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தது.

இதேவேளை, குறித்த சட்டத்தரணி மேன்முறையீடு தொடர்பான அறிவித்தலை நீதிமன்றில் வழங்கியதன் பிரகாரம் மேன்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருப்பதால் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. (எ-10)

# இராணுவம் - பொலிஸ் இடையே வேறுபாட்டை காணமுடியவில்லை

## கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.02

வடக்கு - கிழக்கில் இராணுவத்துக்கும், பொலிஸாருக்கும் இடையில் வேறுபாட்டைக் காணமுடியவில்லை - என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக 434 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 3 வீதம் அதிகமாகும். மேலும், பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்காக மேலும் 175 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கைப் பொறுத்த வரையில், இராணுவத்தினரின் அறிவுறுத்தலின் பேரில், பொலிஸார் மிகவும் அதிகார துஷ்பிரயோகமாக நடந்து கொள்கிறார்கள். நாங்கள் இராணுவத்துக்கும், பொலிஸாருக்கும் இடையில் வேறுபாட்டைக் காணமுடியவில்லை. அதனால், எனது இந்த பாதுகாப்பு தொடர்பான பகுப்பாய்வுக்காக இரண்டையும் சேர்க்க விரும்புகிறேன்.

வரவு - செலவுத் திட்டத்தில் இராணுவத்தினருக்கு 27 வீதம் முதல் 33 வீதம் வரை கணிசமான சம்பள உயர்வையும் வழங்குகிறது. அரசாங்கம் பாதுகாப்பு விடயத்துக்கு முன்னுரிமை அளித்துள்ளமையானது பாதுகாப்புப் படைகளை அதிகரிக்க விரும்புகிறது என்பதையே காட்டுகிறது.

16 வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவுக்கு வந்தது. இன்று இங்கு போரில்லாத போதும், அந்த துறையை மேம்படுத்தும் எண்ணம் உள்ளது. இப்போது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பற்றாக்குறையாக 6.7 வீதம் உள்ளபோதும் ஐ. எம். எவ். நிர்ணயித்த இலக்கு 5. 2 வீதமாகும். மேலும், அரசாங்கம் தனது வருவாய் சேகரிப்பை ஜி. டி. பியில் 15.1 வீதமாக அதிகரிக்க வேண்டும். அடுத்த ஐ. எம். எவ். வின் பிணையெடுப்புக்கு தகுதி பெற வேண்டும். இந்த நிலையை சீராக்குவதற்கு பாதுகாப்புச் செலவீனத்தின் அதிகரிப்பு தடையாகவே உள்ளது. இவ்விடயம் நிலைமைகளை மோசமாக்குகிறது.

இவற்றால் கடுமையான சுமையே அதிகரிக்கிறது..

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் சமூக நலனை விட பாதுகாப்புக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது. அதாவது, புள்ளிவிவரங்களின் அடிப்படையில், சமூக நலன்களுக்கு 43 பில்லியன் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட 35 பில்லியன் குறைக்கப்பட்டுள்ளது. பொரு ளாதார நெருக்கடியால் இந்த நாட்டின் மிகவும் பாதிக்கப் படக்கூடிய பிரிவினர் போராடிக்கொண்டிருக்கும்



நேரத்தில், அதிகரித்து வரும் விலைகள் காரணமாக மேலும் பாதிக் கப்படுகிறார்கள். அனைத்து துறைகளும் உண்மையில் மேம்படுத்தப்பட்டு, பாதிக்கப்படக் கூடியவர்களை ஏதோ ஒரு வகையில் வலுப்படுத்த முயற் சிக்காமல் எதிர்மாறாகச் செயல் படுகின்றன”- என்றார். (எ)

# செம்பியன்பற்று வடக்கில் இரவோடு இரவாக காடழிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.02

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் ஜே. சி. பி. இயந்திரம் மூலம் இரவோடு இரவாக பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் குறிப்பிட்ட நிலப்பகுதியை தனிப்பட்ட தேவைகளுக்காக குத்தகை அடிப்படையில் பெற வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆவண கடிதத்தை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரிடம் கையளித்தவுடன் காடுகள் நிறைந்த சம்பந்தப்பட்ட பெருமளவான நிலப்பகுதியை அனுமதியின்றி ஜே. சி. பி. இயந்திரம் கொண்டு இரவோடு இரவாக முற்றாக அழித்துள்ளார்

சம்பவம் அறிந்து அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி தடுத்து நிறுத்த முற்பட்ட வேளையும் குறித்த நபர் தொடர்ந்து அனுமதியின்றி காடுகளை அழித்துள்ளார்.

இது தொடர்பில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தியிடம் கேட்டபோது,

குறித்த நபர் குத்தகைக்கு காணியைப் பெறுவதற்கு கடிதம் தந்துள்ளதாகவும், காடுகளை அழிப்பதற்கு தாம் அனுமதியளிக்கவில்லை என்றும், குறித்த பிரதேசம் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் இருப்பதால் தம்மால் அனுமதி கொடுக்க முடியாதென்றும், அவ்வாறு அவர் காடுகளை அழித்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். (எ-05)

# மனிதவுரிமைகள் ஆணைக்குழு நெடுந்தீவு மக்களுடன் சந்திப்பு

## பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச்.02

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவுக்கான பயணம் ஒன்று நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. ஆணையாளர் தை. தனராஜ் தலைமையில் இந்தக் குழுவினர் அங்கு பயணம் மேற்கொண்டனர்.

இதன்போது, நெடுந்தீவு பிரதேச மக்களின் மனித உரிமைகள் சார்ந்த பிரச்னைகள் தொடர்பில் அங்குள்ள பொது அமைப்புகளுடனும் பொது மக்களுடனும் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் கல்வி மற்றும் சுகாதாரம் சார்ந்த பிரச்னைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் கபிலன் வில்லவராயன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் , ஆணைக்குழுவின் மனித உரிமை அலுவலர் செல்வி குமுதினி சேவியர், நெடுந்தீவு பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா, வேலணை சுகாதார வைத்திய அதிகாரி எம். ஜெயக்குமார் மற்றும் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. தருமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு மக்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.



மேலும், இந்த பயணத்தின்போது நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பிலும் பொறுப்புடைமை தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நடைபெற்றதுடன் நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கும் சென்று அங்குள்ள பிரச்னைகள் தொடர்பில் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் ஆராயப்பட்டன. அத்துடன் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்துக்கும் குறித்த குழுவினர் சென்றனர்.

இதன்போது, பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் அடிப்டையில் பொறுப்புவாய்ந்த அரச திணைக்கள பிரதானிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.(எ-05)

# செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச்.02

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமுறை, நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து, முற்பகல் 11. 00 மணிக்கு தற்கால சமயநிலை பற்றி ஓய்வுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் உரையாற்றவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள், அரச ஊழியர்களை மறந்து செயல்படும் அரசாங்கம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, மார்ச்.02

**விவசாயிகளின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இன்று விவசாயிகளையும், அரச ஊழியர்களையும் மறந்து செயல்பட்டு வருகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஹொரவப்பொத்தானை தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் மக்கள் சந்திப்பொன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உர மானியம் சரியாக இன்னும் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. தரம் குறைந்த உரங்களும், தரம் குறைந்த கிருமி நாசினிகளுமே விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பயிர்ச் சேத இழப்பீடுகளும் கூட இன்னும் வழங்கப்படவில்லை. நெல்லுக்கு உத்தரவாத விலையும் கிடைத்தபாடில்லை. விவசாயிகள் பல சவால்களை எதிர்கொள்ளும் இவ்வேளையில் விவசாயிகளின் வாக்குகளால் அரச அதிகாரத்தை கைப்பற்றியவர்கள் இன்று விவசாயிகளை மறந்துவிட்டு செயல்பட்டு வருகின்றனர். அண்மைக்காலங்களில் நடந்த அனர்த்தங்களால் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டன. இதன் காரணமாக, ஒர் ஏக்கரில் கிடைக்கும் நெல் விளைச்சல் குறைந்துள்ளது. நியாயமான உத்தரவாத விலை இன்னும் கிடைத்தபாடில்லை. 120 ரூபாய் உத்தரவாத விலையானது போதுமானதாக இல்லை. நெல் கொள்வனவு செய்ய 5000 மில்லியன் ரூபாய் குறைந்த தொகையே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொய் சொன்ன தற்போதைய அரசாங்கத்துக்கு பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. விவசாயிகளை ஏமாற்றிய இந்த அரசாங்கத்துக்கு அடுத்த தேர்தலில் தக்க பாடம் புகட்ட வேண்டும்.

விவசாயிகளை மட்டுமின்றி அரச ஊழியரும் ஏமாற்றப்பட்டுள்ளனர். ஒவ்வொரு 6 மாதத்துக்கு ஒரு தடவையும் 20000 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று தேர்தல் மேடைகளில் தெரிவித்தனர். இவ்வாறு கூறியது நடந்த பாடில்லை. அரச ஊழியர்கள் சம்பள விடயத்தில் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

கொலை கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இன்று நீதிமன்றங்களில் கூட கொலைகள் இடம்பெற்று வருகின்றன. உயர் பாதுகாப்பு வலயத்திலும் கொலைகள் இடம்பெற்று வருகின்றன. பாதுகாப்பற்ற நிலை உருவாகியுள்ளது"- என்றார். (எ)

# நாட்டில் எரிபொருக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, மார்ச். 02

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ராஜ கருணா தெரிவித்தார்.

எனவே, பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் எவ்வித எரிபொருள் பற்றாக்குறையும் ஏற்படவில்லை. எரிபொருள் விநியோகச் செயல்பாடுகள் வழமையான முறையில் இடம்பெறுவதாகவும் அவர் கூறினார்.

விநியோகஸ்தர்கள் எரிபொருள் விநியோகத்தை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நிறுத்துவதாக அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் கேட்டபோதே ராஜ கருணா இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# மறு அறிவித்தல் வரை பூங்கா செல்லத் தடை

கொழும்பு, மார்ச்.02

மழை குறையும் வரை யால தேசிய பூங்கா நேற்றுச் சனிக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை மூடப்படும் என்று யால தேசிய பூங்காவின் பராமரிப்பாளர் மனோஜ் வித்யாரத்ன தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாட்களாக பெய்த அடை மழை காரணமாக யால தேசிய பூங்காவின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் பூங்காவில் உள்ள சில ஏரிகளின் கரைகள் உடைந்துள்ளன.

இதனால், வன விலங்குகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பூங்காவை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார்.

மேலும், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தால், கட்டணம் செலுத்திய சுற்றுலாப் பயணிகள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகியுள்ளதாக யால சபாரி ஜீப் வாகனச் சங்கத்தின் தலைவர் தரிந்து ஜயசிங்க தெரிவித்தார். (எ)

# 'கணேமுல்ல சஞ்சீவ' கொலை மேலும் இருவர் கைதாகினர்!

கொழும்பு, மார்ச்.02

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'கணேமுல்ல சஞ்சீவ' என அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரத்ன என்பவர் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த 19 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர்கள் மினுவாங்கொடை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

'கணேமுல்ல சஞ்சீவ' வை படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்படும் சந்தேக நபர்களுக்கு சிம் அட்டைகளை வழங்கி உதவியதாக சந்தேகிக்கப்படும் மினுவாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, 'கணேமுல்ல சஞ்சீவ'வின் படுகொலை தொடர்பில் இதுவரை 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான

# இலத்திரனியல் சிகரெட்களுடன் வர்த்தகர் ஒருவர் நேற்றுக் கைது

கொழும்பு, மார்ச்.02

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் சிகரெட்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா - எல பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான வர்த்தகர் டுபாயிலிருந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதியிலிருந்து 100 இலத்திரனியல் சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்பின்னர் நீண்ட நேரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# பொலிஸ் உத்தரவை மீறிய லொறிமீது துப்பாக்கிச் சூடு!

## பொலிஸாரால் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 02

கொழும்பு, கடுவலை பிரதேசத்தில் பொலிஸ் உத்தரவை மீறி தப்பிச்செல்ல முயன்ற லொறி ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

நுரைச்சோலையில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றுக்கு மரக்கறிகளை ஏற்றிச் சென்ற லொறியை சாரதி, வத்தளையில் உள்ள தேநீர் கடைக்கு அருகில் நிறுத்திவிட்டு தேநீர் அருந்துவதற்காக சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரொருவர் குறித்த லொறியை திருடிச் சென்றுள்ளார். பின்னர் லொறியின் சாரதி இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் அதிகாரிகள் சிலர் இணைந்து லொறியை பின்தொடர்ந்து சென்ற நிலையில் லொறியை நிறுத்துமாறு சந்தேக நபருக்கு உத்தரவிட்டுள்ளனர்.

சந்தேக நபர் பொலிஸாரின் உத்தரவையும் மீறி ஏனைய வாகனங்கள் மீது மோதி தொடர்ந்து லொறியை ஓட்டிச் சென்றுள்ளார்.

பின்னர் பொலிஸ் அதிகாரிகள், தலாஹேன மற்றும் கடுவலை ஆகிய பகுதிகளில் வைத்து லொறி மீது பல தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ள நிலையில், கட்டுப்பாட்டையிழந்த லொறி கடுவலை நீதிமன்றத்துக்கு அருகில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து லொறியை ஓட்டிச் சென்ற சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடுவலை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தோட்டாக்களுடன் ஒருவர் சிக்கினார்

மாத்தறை, மார்ச் 02

மிதிகம பிரதேசத்தில் தோட்டாக்களுடன் சந்தேக நபர் ஒருவர் மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரொருவரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து ரி -56 ரக துப்பாக்கிக்குரிய தோட்டாக்கள் 48 மற்றும் 84 - எஸ். ரக துப்பாக்கிக்குரிய தோட்டா ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கங்கையில் மிதந்த கால் பொலிஸார் விசாரணை

மாத்தறை, மார்ச்.02

மாத்தறை, அக்குரெஸ்ஸ, நில்வள கங்கையில் மிதந்த நிலையில் மனித கால் ஒன்று பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, மீட்கப்பட்ட மனித கால் மருத்துவ பரிசோதனைக்காக மாத்தறை பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், வெலிஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்த மூன்று நாட்களாக காணாமல்போயுள்ளதாக அக்குரெஸ்ஸ பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

பொலிஸாரால் மீட்கப்பட்ட மனித கால் காணாமல் போன முதியவருடையது என காணாமல்போன முதியவரின் சகோதரி பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இது கொலையா? அல்லது முதலையால் தாக்கப்பட்டு உயிரிழந்தாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

# மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, மார்ச் 02

மலையகத்துக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளை ரயில் நிலையத்துக்கும் ஹாலி எல ரயில் நிலையத்துக்கும் இடையிலான ரயில் மார்க்கத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் மலையகத்துக்கான ரயில் சேவை தடைப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.


இதனால் கொழும்பிலிருந்து பதுளைக்கான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கும் ஒருகொடவத்தைக்கும் இடையில் உள்ள புளுமெண்டால் ரயில் கடவையில் திருத்த வேலைகள் இடம்பெறுவதால் நேற்றுச் சனிக்கிழமை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை குறித்த பகுதி மூடப்பட்டிருக்கும் என புகையிரத திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தாதீர்

## திலித் ஜயவீர எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, மார்ச்.02

**தேசிய பாதுகாப்பு தொடர்பில் அனுபவம் இல்லாதவர்களே தற்போது தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அங்கம் வகிக்கின்றனர். புலனாய்வுப் பிரிவின் தகவல்களை முறையாகச் செயல்படுத்த வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்த வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"அரசாங்கம் அனுபவம் இல்லாத புதிய அரசாங்கமாகும். ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு பிரதி அமைச்சர், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தேசிய பாதுகாப்புச் சபையில் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் முதற்தடவையாக பாதுகாப்புச் சபையில் அமர்ந்துள்ளனர். இவர்கள்தான் பாதுகாப்புச் சபையில் இருக்கின்றார்கள் என்றால் அது பெரும் பிரச்னைக்குரிய விடயமாகும். ஒருபோதும் இவ்வாறு நடந்ததில்லை.

எவ்வாறாயினும் இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகள் குறைந்தது பிரதமராக பதவி வகித்துள்ளனர். பாதுகாப்புச் செயலாளராக இருந்துள்ளனர். அத்துடன் அதற்கு சமாந்திரமாக இராணுவத் தளபதிகளாக நீண்ட காலம் இருந்த சிரேஷ்ட பதவி வகித்தவர்கள் இருந்துள்ளனர். ஆனால், இம்முறை எவரும் இல்லை. இது புதியவர்களை கொண்ட பாதுகாப்பு சபையாகவே உள்ளது"- என்றார். (எ)

# ரி - 56 ரக துப்பாக்கி குறித்து தகவல் தந்தால் சன்மானம்!

## பொலிஸார் விசேட அறிவிப்பு

கொழும்பு, மார்ச்.02

ரி - 56 ரக துப்பாக்கிகள் தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, துப்பாக்கிகள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கு பொதுமக்களின் உதவியும் அவசியம்.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, துப்பாக்கிகள் தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு சன்மானம் வழங்கத் தீர்மானித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

பாதாள உலகக் கும்பல்களின்

# துப்பாக்கிச் சூடுகள் குறித்து அச்சப்படத் தேவையில்லை

கொழும்பு, மார்ச்.02

நாட்டில் பாதாள உலகக் கும்பல்களால் தொடர்ந்து இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 18 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் அவற்றில் 12 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடையவை.

மேலும், 2023 ஆண்டில் 120 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் அவற்றில் 65 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடையவை என்பதுடன் 2024 ஆண்டில் 103 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் அவற்றில் 56 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடையவை ஆகும்.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் கொழும்பு புதுக் கோட்டை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த 19 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார்.

பழிவாங்கும் நோக்கத்தில் பாதாள உலகக் கும்பல்களால் தொடர்ந்து இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சத்துக்குள்ளாகியுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தமிழ் ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச்.02

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியப் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகள், ஊடகப் பயிற்சிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள நவீன ஊடகயுக்திகள், அச்சு - இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்கள் தொடர்பிலான பயிற்சி நெறிகளை இலங்கையிலும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா குறிப்பிட்டார்.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களுக்கும் வீடுகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான யோசனை ஒன்றும் உயர்ஸ்தானிகரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இவை உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி மகஜர் ஒன்றும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டது. (எ)

# மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதே நோக்கம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச்.02

மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை கண்டறிந்து ஊக்குவிப்பதன் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கையின் மின்சாரத் தேவையைக் குறைப்பதும் மின்சாரத்துக்கான அடிப்படைச் செலவைக் குறைப்பதும் முதன்மை நோக்கமாகும். அடுத்த ஐந்து வருடங்களுக்குள் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியை அதிகரித்து அனைத்து இலங்கையர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வழங்குவதே எமது நோக்கமாகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சால் முன்வைக்கப்பட்டுள்ள ஐந்தாண்டு மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அபிவிருத்தித் திட்டமான "பசுமை வலுசக்தித் துறையை விரைவுபடுத்தும் திட்டம் 2025 - 2030" அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி கொழும்பு சினமன் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# 2 மாதத்தில் தாதியர் சேவைக்காக 162 இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு

கொழும்பு, மார்ச்.02

இவ்வருடத்தின் கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் 162 இலங்கையர்கள் தாதியர் சேவைக்காக இஸ்ரேலுக்குச் சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தாதியர் சேவைக்காக இஸ்ரேலுக்குச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

இதன்படி, இதுவரை 2,052 இலங்கையர்கள் தாதியர் சேவைக்காக இஸ்ரேலுக்குச் சென்றுள்ளதாக குறித்த பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

# 11 இலட்சத்து 31, 818 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில்

## நீதி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அவதானம்

கொழும்பு, மார்ச்.02

நீதிமன்றக் கட்டமைப்பில் 11 இலட்சத்து 31 ஆயிரத்து 818 வழக்குகள் நிலுவையில் உள்ளதால் சட்டத்தை நிலைநாட்டும் செயல்பாட்டில் காணப்படும் கணிசமான காலதாமதம் தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, உயர் நீதிமன்றத்தால் தீர்க்கப்பட வேண்டிய 5,785 வழக்குகள் நிலுவையில் இருப்பதுடன், மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 4,572 வழக்குகளும், குற்றவியல் வழக்குகள் விசாரிக்கப்படும் மேல் நீதிமன்றங்களில் 6,286 வழக்குகளும், வணிக மேல் நீதிமன்றங்களில் 6,146 வழக்குகளும், மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றங்களில் 3 வழக்குகளும், மேல் நீதிமன்றங்களில் 27,324 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றங்களில் 262,665 வழக்குகளும், சிறுவர் நீதிவான் நீதிமன்றங்களில் 1260 வழக்குகளுமாக ஒட்டுமொத்தமாக தீர்க்கப்பட வேண்டிய 11 இலட்சத்து 31,818 வழக்குகள் நிலுவையில் இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வழக்கு விசாரணைகளை நெறிப்படுத்துவதற்கான திட்டங்கள் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பில் நீதிபதிகளுக்கு பயிற்சியளிக்கும் செயல்திட்டமொன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பதாக நீதிபதிகள் அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பத்தாவது பாராளுமன்றத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழு முதல் தடவையாக அதன் தலைவர் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கூடியபோதே இந்தத் தகவல்கள் முன்வைக்கப்பட்டன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிகள் தொடர்பில் பெரும் காலதாமதம் இருப்பதாக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் பிரிவுகளிலிருந்து கிடைக்கும் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றவியல் பிரிவில் 70 அரச சட்டத் தரணிகளே இருப்பதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மேலும், ஒதுக்கப்பட்ட வழக்குகளைக் கையாள ஓர் அரசாங்க சட்டத்தரணிக்கு பல வருட அனுபவமும் நிபுணத்துவமும் இருக்கவேண்டும் என்றும், சேவை மூப்பு ஒரு முக்கிய காரணியாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் வகிபாகம் மற்றும் காலதாமதம் தொடர்பில் சில காலங்களாகப்பேசப்பட்டு வருவ தாகவும், திணைக்களத்தில் உள்ள சட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை வழக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது போதுமானதாக இல்லையென நீதி அமைச்சர் ஹர்ஷன இதன் போது தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.03.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், மாசி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ட்ரம்ப் - ஜெலென்ஸ்கி சம்பாசனை

இரு தினங்களுக்கு முன்னர், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சம்பாசனைதான் இன்றளவில் உலகளவில் பிரதான பேசுபொருளாக இருக்கின்றது. ஆரம்பத்தில் சுமுகமாக இடம்பெற்ற சந்திப்பானது, ஒரு கட்டத்தில் சூடான சம்பாசனையாக மாறியது. உக்ரைனின் கனிம வளத்தை பயன்படுத்துவது தொடர்பான உடன்பாட்டை பூர்த்தி செய்யும் நோக்கிலேயே ஜெலென்ஸ்கி வெள்ளை மாளிக்கைக்கு அழைக்கப்பட்டிருந்தார். எனினும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஆகியோருக்கு இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றால் போதாது. ஏனெனில் யுத்தம் இடம்பெறுவது அமெரிக்காவுடன் அல்ல உக்ரைனுடன். எனவே இந்தப் பேச்சுவார்த்தையில் உக்ரைன் பங்கு கொள்ள வேண்டும் என்று, ஜெலென்ஸ்கி குறிப்பிட்டதைத் தொடர்ந்து, அமெரிக்க துணை அதிபர் வான்சின் தலையீட்டில் சம்பாசனை சற்று மாற்றமடைந்து, இறுதியில் ரம்ப் குறுக்கிட்ட போது, சற்று நிலைமை குழப்பமடைந்தது.

இந்தத் தலையங்கம் கருத்தில் கொள்ளும் விடயம் வேறு - அதாவது, சம்பாசனையின் போது, ஓர் இடத்தில், ட்ரம்ப் பயன்படுத்திய கூற்று தொடர்பானது - அதாவது, நீங்கள் சிறந்த நிலையில் இல்லை, மோசமான நிலையில் இருக்கின்றீர்கள், உங்களிடம் ஆடுவதற்கு காட் இல்லை - எங்களுடன் நின்றால் உங்களுக்கு காட் இருக்கும், நாங்கள் இல்லையென்றால் உங்களுக்கு காட் இல்லை, என்று டிரம்ப் கூறுகின்றார். ஜெலென்ஸ்கி அந்தளவிற்கு மோசமான நிலையில் இல்லை. அவருக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு இருக்கின்றது. ஆனாலும் அமெரிக்காவின் ஆதரவு இல்லையென்றால், ரஷ்யா போன்ற ஓர் இராணுவ பலமுள்ள வல்லரசுடன் இந்தளவுக்கு நின்று பிடிப்பது இயலாத விடயமாகும். ஆனால், தற்போது ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் கருதுகின்றது. ஜெலென்ஸ்கியை இறங்கிவருமாறும் கட்டளையிடுகின்றது, தேவைப்பட்டால், வெளியேற்றவும் முயற்சிக்கும்.

"உங்களிடம் காட் இல்லையென்னும்" ட்ரம்பின் கூற்றிலிருந்து ஒருவர் அரசியலில் எதனைக் கற்றுக்கொள்ள வேண்டும்? எந்தவொரு பேச்சுவார்த்தைக்கு செல்கின்ற போதும், அந்தப் பேச்சுவார்த்தையை நிமிர்ந்து எதிர்கொள்வதற்கு பலம் அவசியம் அல்லது மற்றவர்கள் ஒரு தரப்பை கருத்தில் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு, அவர்களின் பக்கத்தில் மற்றவர்களுக்குத் தேவையான ஏதாவது ஒன்று இருக்க வேண்டும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இன்று ஈழத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது சில சுலோகங்களை உச்சரித்து வருகின்றனர் - அதாவது, சமஷ்டி அடிப்படையில்தான் தீர்வு இருக்க வேண்டும், புதிய அரசியல் அமைப்பு வரைபு இப்படித்தான் இருக்க வேண்டும், போர்க் குற்றங்களுக்கான நீதி, இப்படியெல்லாம் அவ்வப்போது கூச்சலிடும் ஈழ அரசியல்வாதிகளால், தங்களுடைய கோரிக்கையை நோக்கி அரசாங்கத்தை நிர்பந்திப்பதற்கு உள்ள பலம் என்ன? இவற்றை எல்லாம் அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டியளவுக்கு, தென்னிலங்கை அரசியல் சமூகத்தை நிர்பந்திப்பதற்கு ஈழத் தமிழர் பக்கத்தில் என்ன இருக்கின்றது. ஈழத் தமிழருக்கு இதை வழங்கியே ஆகவேண்டும் என்று வெளித் தரப்புக்கள் கொழும்பை நிர்பந்திக்குமளவிற்கு ஈழத் தமிழர் பக்கத்தில் என்ன இருக்கின்றது? உண்மையில் இன்றைய நிலையில் ஈழத் தமிழரிடம் எந்தவொரு காட்டும் இல்லை. இதன் காரணமாகத்தான் கடந்த பதினைந்து வருடகாலமாக ஒரு துரும்பையும் அரசியலில் அசைக்க முடியவில்லை. இனியும் நிலைமை அவ்வாறுதான் இருக்கும்.

# யாழ்.போதனா அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்தியர் - தாதி முரண்பாட்டால் அவலநிலை

### அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 02

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், விபத்து மற்றும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் கடமை புரியும் வைத்தியர் ஒருவருக்கும் பொறுப்புத் தாதிக்கும் இடையில் ஏற்பட்ட சிறிய கருத்து முரண்பாட்டின் பின்னணியிலேயே, வைத்தியசாலையில் அசாதாரண சூழ்நிலை தோன்றியுள்ளதாக, அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கிளை தெரிவித்துள்ளது.

அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத் தலைவர் த. பானுமகேந்திரா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மிகக் குறைந்த தாதியர் ஆளணியுடன் இங்கு வினைத்திறனான சேவையை வழங்கி வருகின்றனர்.

இந்த அலகிற்கான சேவையை வழங்க, ஆகக் குறைந்தது 30 தாதிய உத்தியோகத்தர்கள் தேவைப்படும் நிலையில், 13 தாதிய உத்தியோகத்தர்களே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி விடுதிப் பராமரிப்புத் திட்டங்களை தர நிலையிலுள்ள தாதிய உத்தியோகத்தர் ஒருவர், கடந்த 4 வருடங்களுக்கு மேலாக திறம்பட முகாமைத்துவம் செய்து வருகின்றார்.

இவர் 20 வருடங்களுக்கு மேலான சேவை அனுபவத்தை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நிறைவு செய்த ஒரு அர்ப்பணிப்பான சேவையாளர் என்பதனை குறிப்பிட விரும்புகின்றோம்.

இவர் கடமை புரிந்த காலப்பகுதியில் தனது குழு உறுப்பினர்களுடன் மிகவும் அந்நியோன்னியமான உத்தியோக ரீதியான உறவு முறையை பேணி நோயாளர் பராமரிப்புத் திட்டத்திற்கு வெற்றிகரமான செயற்பாட்டை உறுதி செய்துள்ளார்.

மிகக் குறுகிய காலத்தில் அங்கு கடமை புரியும் வைத்தியர் ஒருவருக்கும் பொறுப்புத் தாதிக்கும் ஏற்பட்ட சிறிய கருத்து முரண்பாட்டின் பின்னணியில் இந்த அசாதாரண சூழ்நிலை தோன்றியுள்ளது.

இது சம்பந்தமாக ஆரம்பகட்ட விசாரணைகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதுடன் சுகாதார அமைச்சின் முறையான விசாரணைக்கு இந்த விடயம் உட்படுத்தப்பட்டுள்ளது - என்று கூறியுள்ளார். (அ)

# இரணைமடு வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, மார்ச் 02



தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் இரணைமடுக் குளத்தில் நீர்வரத்து அதிகரித்து வருகின்றது.

எனவே, கூடுதல் நீரை வெளியேற்றும் நோக்கில், இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டன.

நான்கு வான் கதவுகள் 6 இஞ்சி அளவுக்கு திறக்கப்பட்டன. இதனால் குளத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ-05)

### புதுக்குடியிருப்பில் மோட்டார் சைக்கிளில்

# கசிப்பு விற்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது

முல்லைத்தீவு, மார்ச்.02

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பு விற்பனை செய்த இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.


முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் விற்பனை செய்யப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். பி. ஆர். ஹேரத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக சென்ற மோட்டார் சைக்கிளை மறித்து சோதனை செய்த போது இந்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசுவமடு பகுதியைச் சேர்ந்த 21, 26 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 55 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணையின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியலை ஆராதிப்போம்!

- நாகை பாலா

இந்தியா முழுவதும் தேசிய அறிவியல் தினம் பிப்ரவரி 28 ஆம் தேதி ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. 1928ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி சேர் சி.வி. ராமன் ஒளிச்சிதறலைக் கண்டுபிடித்தார். இது 'இராமன் விளைவு' என்று அழைக்கப்பட்டது. இதற்காக 1930 இல் இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இத்தகைய சிறப்பு மிகுந்த ராமன் விளைவைக் கண்டுபிடித்த நாள் இந்தியாவில் தேசிய அறிவியல் தினமாக 1987 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு தலைப்போடு கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 'நிலையான வளர்ச்சிக்கான அறிவியல்: பசுமை தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்' என்ற தலைப்பில் கொண்டாடப்படுகிறது.



அறிவியல் என்பது எப்படி கற்பிக்கப்படுகிறது? எப்படி கற்றுக் கொள்ளப்படுகிறது? என்பதில் ஒரு நாட்டின் வளர்ச்சி மறைந்திருக்கிறது. இந்தியாவில் பெரும்பாலும் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு வரை அறிவியலில் செய்முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது கிடையாது. மதிப்பெண்கள் சார்ந்துதான் கற்பித்தல் நடைபெறுகிறது. ஒரு மதிப்பெண் வினாக்களுக்கு எப்படி விடை அளிப்பது ஐந்து மதிப்பெண் வினாக்களுக்கு எப்படி விடை அளிப்பது என்ற ரீதியில்தான் அறிவியல் கற்பிக்கப்படுகிறது. பாடங்களில் உள்ள அறிவியல் கருத்துகளை மனப்பாடம் செய்வதும் அதை தேர்வில் எழுதுவதும் அறிவியலை வளர்க்கப் பயன்படாது. ஒரு மாணவனுக்கு ஆராய்தல் என்ற மனப்பான்மையை ஏற்படுத்தி விட்டால் அவனுக்கு அறிவியல் மிக எளிதாக கைவசமாகும்.

'மேம்படுத்தல்' என்பது அறிவியலில் மற்றொரு நோக்கமாகும். நாம் ஏற்கெனவே பயன்படுத்தும் ஒரு பொருளை மேலும் எவ்வாறு மக்களுக்குப் பயன்படும் வகையில் மேம்படுத்துவது என்ற சிந்தனையை மாணவர்களிடையே உருவாக்க வேண்டும். குண்டூசி என்னும் பொருள் 'ஊக்கு' என்று மேம்படுத்தப்படுவதற்கு அறிவியல் சிந்தனையே காரணம். பயன்படுத்துபவரையும் மற்றவர்கள் கைகளையும் காயப்படுத்தாத வண்ணம் குண்டூசியின் பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும் என்ற அறிவியல் பயணம் நீண்ட நெடியது. ஏற்கனவே பயன்படுத்தும் பொருளையோ உபகரணத்தையோ 'மேம்படுத்துவது' என்பது சுற்றுச்சூழலையும் மனிதனின் உடல் நலத்தையும் பாதிக்காத வகையில் அமைய வேண்டும். இருசக்கர வாகனங்களில் இருந்து வெளியாகும் புகையின் அளவைக் குறைப்பதற்கு அதில் உள்ள கூடுதல் கார்பனை எப்போதும் எரியும் முன்விளக்காக தற்போது மாற்றியிருப்பது மேம்பாட்டுக்கு சரியான எடுத்துக் காட்டு.

'பரவலாக்குதல்' என்பது அறிவியலின் மிக முக்கியமான அம்சமாகும். நோய்களை குணமாக்க கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளையும் சாதாரண மக்கள் பயன்படுத்தும் அறிவியல் உபகரணங்களையும் கண்டுபிடித்து கண்காட்சியில் வைப்பதோ அல்லது அதிக விலைக்கு விற்பதோ நோக்கம் கிடையாது. அதை அனைவரும் பயன்படுத்தும் வகையில் மிகக் குறைந்த விலையில் உள்ள மூலப் பொருள்களைக் கொண்டு தயாரித்தலே மிகச் சிறந்த அறிவியல் செயல்பாடாக இருக்க முடியும். அப்போதுதான் சாதாரண மக்கள் பயன்படுத்தும் வகையில் அமையும்.

ஆராய்தல், மேம்படுத்துதல், பரவலாக்குதல் என்ற மூன்று மனப்பான்மைகளையும் மாணவர்களிடம் உருவாக்கிய பிறகு, அவர்களுக்குக் கற்பிக்கப்படும் ஒவ்வோர் அறிவியல் பாடப் பொருளும் அவர்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமையும்.

மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தைத் தூண்டுவது மிகப் பெரிய பணி என்றால் அதைவிட மிக முக்கியமான பணி, அவர்களது கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தி அங்கீகரிப்பதே ஆகும்.

அறிவியல் என்பது வெறும் விஞ்ஞானிகளுக்கும் மெத்த படித்தவர்களுக்குமான சொத்து அல்ல. அவை அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும். அதைத் தான் அறிவியலின் வெற்றியாகக் கருத முடியும். அறிவியல் ஒரு பாடம் அல்ல, அது வாழ்க்கையின் ஓர் அங்கம் என்பதை மாணவர்கள் அறிய வேண்டும். அன்றாட வாழ்வில் அறிவியல் மூலம் எப்படி ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வது என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

நாம் தினமும் பயன்படுத்தும் சானிடைசர் எளிதில் தீப்பற்றக் கூடியதா? குழந்தைகளுக்கு டயாபர் அதிகம் பயன்படுத்தினால் என்ன விளைவு ஏற்படும்? கொழுப்பு உணவுகள் சாப்பிட்டு விட்டு குளிர்ந்த நீர் அருந்தலாமா? ஷாம்பூ தினமும் பயன்படுத்துவது கேசத்திற்கு நன்மை விளைவிக்குமா? போன்ற அன்றாட வாழ்வுக்கு தேவையான சில விஷயங்கள் மாணவர்களைச் சென்றடைய வேண்டும். இவை ஆரோக்கியத்துக்கோ சுற்றுச்சூழலுக்கோ தீமை விளைவிக்கும் என்றால் இவற்றுக்கான மாற்றுப் பொருள்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அமெரிக்கா உட்பட பல மேலை நாடுகளில் உயர்நிலைப் பள்ளி வரை வகுப்பறை கற்பித்தல் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகின்றன. ஒரு நாளின் முற்பகுதி முழுவதும் வகுப்பறை கற்பித்தலுக்கு ஒதுக்கப்பட்டால், அந்த நாளில் பிற்பகுதி அறிவியல் மற்றும் இதர பாடங்களின் செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகிறது. மாணவர்கள் தாங்கள் முற்பகலில் கற்றதை பிற்பகலில் பள்ளி வளாகத்திலேயே இருந்து செயல்பாடுகளாக செய்து பார்க்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

அறிவியலை மாணவர்கள் விரும்பும் வகையில் வகுப்பறைச் சூழலை ஏற்படுத்தி அதற்கான போதிய நேரம் ஒதுக்கி அறிவியலை ஒரு பாடமாக மட்டும் கருதாமல் அறிவியலைக் கொண்டாடும் தலைமுறையாக வருங்காலத் தலைமுறையை மாற்ற இந்த அறிவியல் தினத்தில் உறுதி ஏற்போம்.

## இந்தவார ராசிபலன் 02.03.2025 - 08.03.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மாசி 18
நல்ல நேரம்: 09.27 - 10.57 ராகு காலம் : 04.57 - 06.27 திதி : திருதியை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் மன மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களைக் காண்பீர்கள். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய சுற்றுலாப் பயணங்களின் மூலம் இன்புறுவீர் கள். புதிய நண்பர்களால் பல நன்மைகள் ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்குப் பணியில் இடமாற்றங்கள் ஏற்படும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத சில பிரச்சனைகள் ஏற்படலாம். காரியங்களில் தடைகள் ஏற்படும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. தந்தை வழியால் நன்மைகள் ஏற்படும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். இசை ஆர்வத்தால் சங்கீத சபாகளுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் மூலம் நன்மைகள் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலமாக இருக்கும். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். மாணவர்கள் அன்றன்றைக்கு தங்கள் பாடங்கள் அனைத்தையும் அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும். உழைப்புக்கு ஏற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். அன்னையின் அன்பு, அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து கௌரவம் உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. உறவுகள் வருகையால் சந்தோஷம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட் விவாதமும் பாதாள உலக கொலைகளும்



வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்பு கடந்த வாரம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து தற்போது அதன் குழுநிலை விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரையான விவாதங்களில் பெரும்பாலான எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பட்ஜெட்டின் பொருளாதாரத்தை விடுத்து பட்ஜெட்டின் அரசியலையே பேசினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருளாதாரத்தை கையாளும் ஜனாதிபதி திசாநாயக்க ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணான வகையில் பட்ஜெட்டை சமர்ப்பித்திருப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கூறினார்கள். ஜே.வி.பி.யின் பொருளாதாரக் கொள்கைகளை தேசிய மக்கள் சக்தி கைவிட்டு விட்டது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஜே.வி.பி.யின் பொருளாதாரக் கொள்கைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று இந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விரும்புகிறார்களா அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளை அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றுவதை வரவேற்கிறார்களா என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் விமர்சிப்பதற்காக தர்க்கரீதியாக பொருத்தமில்லாத வகையில் பாராளுமன்ற விவாதங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

அதேவேளை, ஜனாதிபதி திசாநாயக்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தனது அரசாங்கத்துக்கு தொடர்ந்து கிடைத்து வருவது குறித்து பெருமைப்படுகிறார் என்றே தோன்றுகிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தொடர்ந்து கிடைக்கப்போவதில்லை என்ற எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பை தாங்கள் பொய்யாக்கிவிட்டதாக அவர் திருப்திப்படுகிறார் என்பதை அவரின் கருத்துக்கள் வெளிக்காட்டுகின்றன. ஜே.வி.பி.யின் கோட்பாடுகளை தாங்கள் கைவிடவில்லை என்று அழுத்தம் திருத்தமாக இப்போது ஜனாதிபதி கூறுவதில்லை. சிலவேளை அவர் அவ்வாறு கூறியிருந்தால், காலத்துக்கு ஒவ்வாத கொள்கைகளில் இன்னமும் கூட அவர் நம்பிக்கை கொண்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் மறுதலையாக குற்றஞ்சாட்டவும் தவறமாட்டார்கள்.

தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு கூறியதைப் போன்று சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள்பேச்சுவார்த்தைக்கு உள்ளாக்குவது என்பது சுலபமாகச் சாத்தியமாக்கக்கூடியது அல்ல என்பதை ஜனாதிபதி திசாநாயக்க தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளையே திசாநாயக்க தொடர்ந்து முன்னெடுக்கிறார் என்று ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலின் பிரகாரம் தொடர்ந்து செயற்பட்டால் இலங்கை முழுமையான பொருளாதார மீட்சியை அடைய முடியுமா என்ற கேள்வி ஒருபுறமிருக்க, தற்போதைய தருணத்தில் அதன் நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்றாவிட்டால் பொருளாதாரம் மேலும் மோசமடையக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதே கசப்பான யதார்த்தமாகும். இதே போக்கில் சென்றால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் பொருளாதாரக் கொள்கைகளை எப்போது நடைமுறைப்படுத்தப் போகிறது என்பது முக்கியமான ஒரு கேள்வி. இதற்கு அரசாங்க தலைவர்களினால் உகந்த பதிலைக் கூறக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.

இது இவ்வாறிருக்க, அண்மைய நாட்களாக கடுமையாக தீவிரமடைந்திருக்கும் பாதாள உலக கொலைகள் பட்ஜெட் விவாதத்தை பெருமளவுக்கு கிரகணம் செய்துவிட்டன. மக்களின் கவனம் துப்பாக்கி வன்முறைகள் மீது திரும்பியிருக்கிறது. விவாதங்களின் போது பட்ஜெட் பற்றி பேசுவதை விடுத்து தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற கொலைகள் குறித்தே பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுகிறார்கள். துப்பாக்கி வன்முறைகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர்களுக்கு பதில் அளிக்கும் போது அமைச்சர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பில் அரசாங்கத்துக்கு இருக்கும் தடுமாற்றத்தை அம்பலப்படுத்துகின்றன.



குறைந்தபட்சம் இரு கொலைகளாவது இடம்பெறாமல் ஒரு நாளும் கூட கடந்து செல்வதாக இல்லை. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாதாள உலக குழுவின் ஒரு தலைவரான கணேமுல்ல சஞ்சீவ என்பவர் பெப்ரவரி 19 ஆம் திகதி கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டுக்குள் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அவரைச் சுட்டுக்கொலை செய்தவர் ஒரு சட்டத்தரணி போன்று வேடமணிந்து நீதிமன்றத்திற்குள் வந்தார்.

கொழும்பு புதுக்கடையில் நீதிமன்றத்திற்குள் வைத்து பாதாள உலக பேர்வழிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பது இதுதான் முதற்தடவை அல்ல. 2004 ஜனவரியில் இதே போன்றே கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்குள் தம்மிக்க அமரசிங்க என்ற பாதாள உலக பேர்வழி சுட்டுக்கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலைசெய்தவர் சட்டத்துறை மாணவனாக வேடமணிந்து நீதிமன்றத்துக்கு வந்தார். அதே வருடம் நவம்பரில் மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய அவரது கொழும்பு வாசஸ்தலத்துக்கு முன்பாக பாதாள உலகத்தவர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

விரும்பிய விதத்தில் தாக்குதல்களை மேற்கொள்வதில் தங்களுக்கு இருக்கும் ஆற்றலை பாதாள உலக கும்பல்கள் பொலிசாருக்கு சவால் விடுக்கும் வகையில் நிரூபித்த பல சம்பவங்களை கூற முடியும். ஆனால், அரசாங்கங்களும் பொலிசாரும் முன்னைய சம்பவங்களில் இருந்து எந்த படிப்பினையையும் பெறவில்லை. சம்பவத்துக்கு பின்னர் சகலரும் புத்திசாலிகள் போன்று பேசுவது சுலபம். ஒவ்வொரு தாக்குதல் சம்பவத்துக்கு பின்னரும் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து பாதாள உலக கும்பல்களை முற்றாக ஒழித்துக் கட்டப் போவதாக அரசாங்கங்கள் சூளுரைத்தன. ஆனால் நாளைடைவில் எல்லாமே மறக்கப்பட்டுவிடும். அரசாங்கம் மீண்டும் உஷாரடைவதற்கு இன்னொரு பாதாள உலக வன்முறைச் சம்பவம் இடம் பெற வேண்டியிருக்கும்.

> இனநெருக்கடியின் விளைவாக மூண்ட மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போரும் தென்னிலங்கையில் இரு ஆயுதக்கிளர்ச்சிகளும் சமூகத்தில் ஆயுதங்கள் பரவலாக புழக்கத்தில் இருப்பதற்கு முக்கியமான காரணங்களாகும். வன்முறைகளை தூண்டிய அரசியல் கலாசாரத்தின் விளைவுகளையே இலங்கை இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் 2023 பிற்பகுதியில் பாதாள உலகக் கும்பல்களையும் போதைப் பொருள் கடத்தலையும் ஒழித்துக் கட்டுவதற்கு அன்றைய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரிலான் அல்விஸும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனும் பெரும் ஆரவாரத்துடன் "யுக்திய" என்ற நடவடிக்கையை தொடங்கினார்கள். கடுமையான அத்துமீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் சில மாதங்களாக முன்னெடுக்கப்பட்ட அந்த நடவடிக்கையின் விளைவாக பாதாள உலக வன்முறைகளும் போதைப்பொருள் கடத்தலும் பெருமளவுக்கு ஒடுக்கப்பட்டுவிட்டதாக அமைச்சர் பிரகடனம் செய்தார். அதன் இலட்சணத்தை கடந்த பல மாதக்களாக நாட்டின் பல பாகங்களிலும் தொடரும் பாதாள உலக கொலைகள் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன.

பாதாள உலக கும்பல்களையும் போதைப்பொருள் வியாபாரத்தையும் இரு போயா தினங்களுக்குள் ஒழித்துக் கட்டப்போவதாக சூளுரைத்துக் கொண்டு தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அண்மைய சம்பவங்களுக்கு பிறகு முன்னைய அரசாங்க தலைவர்களைப் போன்றே ஜனாதிபதி திசாநாயக்கவும் அவரது அமைச்சர்களும் பாதாள உலக கும்பல்கள் முற்றாக துடைத்தெறியப்படும் என்று சூளுரைக்கிறார்கள். தீவிரமடைந்திருக்கும் துப்பாக்கி வன்முறைகளின் விளைவாக அரசாங்கம் கடுமையான நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது.

குற்றச்செயல்களின் அதிகரிப்பின் பின்னணியில் சதித்திட்டம் ஒன்று இருப்பதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன கூறுகிறார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் விசாரணைகளை தடம்புரளச் செய்வதற்கும் நாட்டின் உறுதிப்பாட்டைக் குலைக்கவும் முயற்சியொன்று மேற்கொள்ளப்படுவதாக தங்களுக்கு புலனாய்வு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் கடந்தவாரம் அவர் ஊடகங்களுக்கு கூறினார்.

பாதாள உலக கும்பல்களுக்கும் போதைப்பொருள் மாபியாவுக்கும் எதிரான தனது போரைச் சீர்குலைக்கும் நோக்குடனேயே 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியது தற்போது நினைவுக்கு வருகிறது. அப்போது குற்றவியல் புலனாய்வு திணைக்களத்துக்கு பொறுப்பாக இருந்த ரவி செனவிரத்ன இப்போது ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளை சீர்குலைக்கும் நோக்குடனேயே பாதாள உலக கும்பல்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருப்பதாக கூறும் விசித்திரத்தை காண்கிறோம்.

தற்போதைய வன்முறைகள் வெறுமனே பாதாள உலக குழுக்களுக்கு இடையிலான மோதல்களின் விளைவானவையா அல்லது அவற்றின் பின்னால் முறைகரங்கள் இருக்கின்றனவா என்பதை உறுதி செய்வதற்கு அரசாங்கம் விசாரணை ஒன்றை ஆரம்பித்திருப்பதாக ஜனாதிபதி திசாநாயக்கவும் கூறியிருக்கிறார்.

தற்போதைய துப்பாக்கி வன்முறைகளின் பின்னணியில், அரசாங்க தலைவர்கள் தேசிய பாதுகாப்பு என்பதற்கு வெவ்வேறு வியாக்கியானங்களை அளிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த வாரம் கண்டியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஜனாதிபதி பாதாள உலக குழுக்களுக்கு இடையில் மோதல்கள் இடம்பெறுகின்ற போதிலும், அண்மைய சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கோ அல்லது மக்களின் பாதுகாப்புக்கோ அச்சுறுத்தலை தோற்றுவிக்கவில்லை என்று கூறினார். தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தேன்றியிருப்பதாக கருதுவதற்கு மோதுமானளவு பாரதூரத்தன்மை கொண்டவையாக


(14ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் மிகப்பெரிய ஆணைக்கு மத்தியிலும் இலங்கையின் மிதவாத அரசியலுக்கு அளிக்கப்படும் மதிப்பு



கலாநிதி ஜெகான் பெரேரா





ஜனநாயக அரசியல் சமுதாயம் ஒன்றில் மக்களின் ஆணையைப் பெற்றவர் எவ்வாறு தடுத்து நிறுத்தமுடியாத ஒருவராக மாறமுடியும் என்பதை அமெரிக்காவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிருவாகம் காண்பித்துக் கொண்டிருக்கிறது. தேசிய மக்கள் சக்தியை விமர்சிப்பவர்கள் அதன் பொருளாதாரக் கொள்கையை வெறுமனே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கையின் முக்கியமான அம்சங்களின் ஒரு தொடர்ச்சியே என்று அடிக்கடி ஏளனம் செய்கிறார்கள்.

அரசாங்கம் மிகப்பெரிய மக்கள் ஆணையைப் பெற்றிருக்கின்ற போதிலும், தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் இருந்து பெருமளவுக்கு மாறுவதற்கு பதிலாக முன்னாள் ஜனாதிபதி அந்த நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பிரகாரமே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதே முக்கியமான விமர்சனமாகும். அவ்வாறு விமர்சிப்பவர்களும் கூட, தேர்தல்களின் போது சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்துவதாக தேசிய மக்கள் சக்தியின் பேச்சாளர்கள் வழங்கிய வாக்குறுதியைச் சுட்டிக் காட்டுகிறார்களே தவிர, அவர்களிடமும் மாற்றுத்திட்டங்கள் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உதாரணத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்பற்றும் இன்னொரு அம்சமும் இருக்கிறது. பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் பதவியில் இருந்த காலப்பகுதிகளில் விக்கிரமசிங்க மென்மையான முறையிலேயே ஆட்சியை நடத்தினார் மக்களை அச்சுறுத்துவதற்கு அவர் அரசின் வல்லமையைப் பயன்படுத்தவில்லை.

அறகலய போராட்டத்துக்கு பின்னரான காலப்பகுதியில் அவர் வீதிப் போராட்டங்களை அனுமதிக்கவில்லை என்பதுடன் அத்தகைய போராட்டங்களில் ஈடுபட்டவர்களை கைதுசெய்து தடுத்து வைத்தார். அதேவேளை, நிலையுறுதியற்றதாக இருந்த சமுதாயம் ஒன்றில் அரச அதிகாரத்தை குறைந்தபட்சமாக பயன்படுத்தி உறுதிப்பாட்டைக் கொண்டுவந்தார்.

விக்கிரமசிங்கவுக்கு பிறகு பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அவரைப் போன்றே மென்மையான போக்கிலேயே ஆட்சியை நடத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இறுதியாக அதிகாரத்தில் இருந்த காலப்பகுதியில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இருக்கவில்லை, ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவுக்கு மக்கள் ஆணை இருக்கிறது என்பதே வித்தியாசமாகும். ஜனாதிபதி ட்ரம்ப் தனது அதிகாரத்தை முழுமையாகப் பயன்டுத்துவதைப் போன்று செய்வதற்கு விக்கிரமசிங்க நினைக்கவில்லை.

அடுத்தடுத்து நடைபெற்ற இரு தேசிய தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி மக்களின் ஆணையைப் பெற்றது. பாராளுமன்ற தேர்தலில் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது. இந்த ஆணையை வைத்துக் கொண்டு அமெரிக்காவில் இன்று ஜனாதிபதி ட்ரம்ப் நிருவாகத்தில் (அமெரிக்க காங்கிரஸின் மக்கள் பிரதிநிதித்துவ சபையிலும் செனட் சபையிலும் அவரின் குடியரசு கட்சிக்கு பெரும்பான்மைப் பலம் இருக்கிறது) காணப்படுவதைப் போன்று தேசிய மக்கள் சக்தியினாலும் "அதிர்ச்சியையும் பிரமிப்பையும்" தரக் கூடிய தந்திரோபாயங்களை பின்பற்றியிருக்க முடியும்.

தடுத்து நிறுத்த முடியாத ஒரு சக்தியாக மாறிவிட்ட அமெரிக்க ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டுக்குள்ளும் வெளியுறவு விவாகரங்களிலும் மாற்றக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிராத கடுமையான மாற்றங்களைச் செய்திருக்கிறார். உலகின் மிகப் பெரிய பணக்காரரான எலோன் மஸ்க் கின் உதவியுடன் அமெரிக்காவை சாத்தியமானளவுக்கு பலம் பொருந்தியதாகவும் பாதுகாப்பானதாகவும் சுபிட்சமிக்கதாகவும் கட்டியெழுப்புவதற்கு அவர் விரும்புகிறார். இருவருமே எந்த வகையிலும் தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு தங்களது எண்ணத்தில் செயற்படுகின்ற மட்டுமீறிய சக்திகளாக மாறிவிட்டார்கள் போன்று தோன்றுகிறது.

> அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்பினதும் இலங்கையில் ஜனாதிபதி திசநாயக்கவினதும ஆட்சிமுறைப் பாங்குகளுக்கு இடையிலான வேறுபாடு, ஜனநாயக தலைவர்கள் பின்பற்றக்கூடிய வேறுபட்ட பாதைகளை தெளிவாகக் காட்டுகிறது.

அமெரிக்கா முன்மாதிரியான ஜனநாயக ஆட்சிமுறையைக் கொண்டிருப்பதற்காக உலகின் பல பாகங்களில் குறிப்பாக, ஜனநாயக நாடுகளில் வியந்து பாராட்டப்படுகிறது. தடுப்புக்களும் சமப்படுத்தல்களும் கோட் பாடும் அதிகாரங்கள் வேறாக்கல் கோட்பாடும் அதாவது அரசாங்கத்தின் ஒரு கிளையின் அதிகாரத்தை அதன் ஏனைய கிளைகள் வரையறைப்படுத்துகின்ற முறைமைகள் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்திருக்கின்றன போன்று தெரிகிறது. ஆனால், அந்த முறைமைகள் தற்போது ஜனாதிபதி ட்ரம்பின் மக்கள் செல்வாக்கு காரணமாகவும் தனது சிந்தனையும் எலோன் மஸ்க்கின் சிந்தனையும் மிகவும் சரியானவை என்ற அவரின் நம்பிக்கை காரணமாகவும் உகந்த முறையில் செயற்படுவதாக தெரியவில்லை.

மக்களின் ஆணையைப் பெறுகின்ற அரசியல் தலைவர்களுக்கு கிடைக்கக் கூடிய மட்டுமீறிய அதிகாரங்களை அமெரிக்காவில் தற்போது நன்றாகக் காணக்கூடியதாக இருக்கிறது. ஜனாதி பதியின் ஜனநாயக ரீதியான ஆணையை ட்ரம்ப் நிருவாகம் முழு அளவில் பயன்படுத்துகின்றது. ஆனால், எவ்வளவு நீண்டகாலத்துக்கு அவ்வாறு செய்யும் என்பதே கேள்வி. அவர்களுக்கு நாட் டுக்குள் வலுவான மக்கள் ஆதரவு இருக்கிறது. ஆனால், மிகவும் வலுவான எதிர்ப்பையும் அவர்கள் தோற்றுவித்துக்கொண்டிருக்கிறார்கள். அது அமெரிக் காவை ஐக்கியப்படுத்தாமல் பிளவுகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதே பிரச்சினையாகும்.

அமெரிக்காவில் வேறுபட்ட முறை யில் சிந்திப்பவர்கள் சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பெருமளவில் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரை, அமெரிக்கா முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தன்னிடம் சரியான தீர்வுகள் இருப்பதாக ட்ரம்ப் கொண்டி ருக்கும் நம்பிக்கையை கையாளுவது சவாலாக இருக்கிறது. பெரும்பான்மை யான அமெரிக்க வாக்காளர்கள் அவரை நம்புவதாகவும் தோன்றுகிறது.

அமெரிக்காவை பலம்பொருந்தியதாகவும் பாதுகாப்பானதாகவும் சுபிட்சமிக்கதாகவும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ட்ரம்பும் அவரது குழுவும் எடுத்துவருகின்ற தீர்மானங்கள், அரசாங்க திணைக்களங்களை முற்றாக இல்லாதொழிப்பதையும் சமுதாயத்தில் பெருமளவுக்கு பின்தங்கிய பிரிவினரின் பாதுகாப்புக்காக நிறுவப்பட்ட பாவனையாளர் நிதிப் பாதுகாப்பு பணியகம், நோய்கள் கட்டுப்பாடு, தடுப்புக்கான நிலையங்கள் மற்றும் உணவு, மருந்து நிருவாகம் ஆகியவற்றில் ஊழியர்களை பணிநீக்கம் செய்வதையும் உள்ளடக்கியதாக இருக்கின்றன. அவர்களின் இலக்குகளில் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனமும் (யூ.எஸ்.எயிட்.) அடங்கு கிறது. அதனால் இலங்கையும் உலகின் பின்தங்கிய ஏனைய பல பாகங்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் செயற்திட்டங்களுக்கு 2019 ஆம் ஆண்டில் இருந்து யூ.எஸ். எயிட் வழங்கிய நிதியுதவி 3100 கோடி ரூபா என்று வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இது வெவ்வேறு ஜனாதிபதிகள், அரசியல் கட்சிகளின் கீழ் இடம்பெற்றிருக்கிறது. மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் இறுதி வருடத்தில் (2019) 2 கோடி 40 இலட்சம் டொலர்கள் பெறுமதியான செயற்திட்டங்கள் கைச்சாத்திடப்பட்டன. கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தின் கீழ் 4 கோடி 19 இலட்சம் டொலர்கள் பெறுமதியான திடடங்களும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கீழ் 2 கோடி 60 இலட்சம் டொலர்கள் பெறுமதியான திட்டங்களும் அநுரா குமார திசாநாயக்க அரசிங்கத்தின் கீழ் இதுவரையில் ஒரு கோடி 80 இலட்சம் டொலர்கள் பெறுமதியான திட்டங்களும் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன.

யூ.எஸ்.எயிட்டின் நிதியுதவிகள் ட்ரம்ப் நிருவாகத்தினால் முடக்கப்பட்ட தருணத்தில் அந்த நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீதியமைச்சு, நிதியமைச்சு, சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சக்தி, வலு அமைச்சு ஆகியவற்றின் கீழ் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இவற்றுக்கு புறம்பாக தனியார்துறையின் வர்த்தக அபிவிருத்திக்காகவும் சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சிக்கான அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்திட்டங்களுக்காகவும் யூ.எஸ். எயிட் ஆதரவை வழங்கிக் கொண்டிருந்தது.

இலங்கையில் யூ.எஸ்.எயிட்டின் பயனாளிகள் தாங்கள் அந்த நிறுவனத்தின் நிதியுதவியுடன் முன்னெடுத்துவந்த பணிகளைத் தொடருவதற்கு தேவையான நிதியுதவியை பெறுவதற்கு மாற்று வழிகளைத் தேடவேண்டிய சவாலை எதிர்நோக்குகிறார்கள். சட்டமுறைமையை மேம்படுத்துவதற்கான ஆதரவு, நீதிமன்றங்களுக்கு தேவையான டிஜிட்டல் தொழில்நுட்பத்தை வழங்குதல், நீதிபதிகள், நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தல், தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் போன்ற செயற்திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

அரசாங்க திணைக்களங்கள் அவற்றின் சேவைகளை நாடிவரும் மக்களுக்கு பேதங்கள் பாராது சகல குடிமக்களையும் அரவணைக்கும் வகையிலான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் குறித்து விழிம்புணர்வை ஏற்படுத்தல், பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக இனங்களுக்கு இடையிலான வர்த்தக ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளும் யூ.எஸ். எயிட்டின் நிதியுதவியின் மூலம் முன்னெடுக்கப்பட்டன. யூ.எஸ். எயிட்டின் நிதியுதவி தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டப்பட்டிருக்கும் அரசாங்கத்தின் (அரசாங்க சார்பற்ற) தொண்டர்நிறுவனங்கள் செயலகம் மேற்கூறப்பட்ட செயற்திட்டங்களுக்கும் யூ.எஸ். எயிட்டின் நிதியுதவியை இழந்தவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் மாற்று வழிகளை தேடவேண்டிய அவசியம் இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் பெற்ற ஆணையையும் விட பெருமளவுக்கு மெச்சத்தக்க ஒரு ஆணையை பாராளுமன்ற தேர்தலில் பெற்ற ஜனாதிபதி அநுரா குமார திசநாயக்கவின் அரசாங்கம் பொருளாதாரம்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் வெற்றி பெறவென கூறுபோட்டு விற்பனை செய்ய தமிழ்த்தேசியம் கடைச்சரக்கா?

பனங்காட்டான்



தமிழர்கள் கேட்கும் தனிராச்சியத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டால் நாங்கள் நிம்மதியாக இருக்கலாம். அவர்கள் தங்களுக்குள் அடிபட்டு கூறுபோட்டு முடித்துவிடுவார்கள் என்று பதவிகள் இழந்திருக்கும் சிங்களத்தலைவர் சொன்னது ஒரு காலத்தில் பிரபல்யமாகப் பேசப்பட்டது. அவரே பின்னர் புலிகளை முடித்துவிட்டோம் என்று சொல்லி விமான நிலைய மண்ணைத் தொட்டு கும்பிட்ட படமும் ஊடகங்களில் பவனி வந்தது.

புலிகளை முடித்துவிட்டோம் என்று அன்று சொல்லியவரை இன்று அவரது மக்களே செல்லாக்காசாக பார்க்கிறார்கள். அவரது சகோதரர்களின் முகங்களை எங்கும் காணவில்லை. தமது அரசியல் வாரிசாக முதல் மகன் நாமலை கொண்டு வர நாளும்தோறும் அவர் படும்பாடு பெரும்பாடு.

குடியிருக்கும் அரச பங்களாவை விட்டு எத்தனை தடவை விலகச் சொல்லி சொன்னாலும் அடாத்தாக இருக்கிறார். அரசாங்க உண்டியலுக்கு செல்ல வேண்டிய கோடானுகோடி பணத்தை வெளிநாடுகளில் பதுக்கியதற்காக நடைபெறும் விசாரணைகளை அரசியல் பழிவாங்கல் என்கிறார். மூன்று புதல்வர்களில் இருவர் புலன்விசாரணைக்கு படியேறி வருகின்றனர். இது போதாதென்று அவருக்கான பாதுகாப்பும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

புலிகளை முடித்துவிட்டோம் இனி அச்சமில்லை என்று 2009ல் கூறியவருக்கு இப்போது புலிகளால் உயிராபயம் என்று மேலதிக பாதுகாப்பை அவரது அணியினர் கேட்கின்றனர். இதனைக் கூறியே சிங்கள மக்களை உசுப்பேத்த முயல்கின்றனர். ஆனால், ஆயுதங்களின் பலமறிந்த ஜே.வி.பி.யின் அநுர குமாரவுக்கு இதெல்லாம் சும்மா கதை. இதற்கெல்லாம் மசிந்துபோக அவர் தயாரில்லை.

இதனை எழுதும்போது, தமிழர் தேசிய அரசியலிலும் இதே பாணியில் தான் சில நடைமுறைகள். 2009க்குப் பின்னர் விடுதலைப் புலிகளால் அச்சமிருப்பதாகத் தெரிவித்து அவருக்கு ராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. செல்லுமிடமெல்லாம் ராணுவத்தினர் தோழமையோடு அவரருகே திரிந்தனர். காலம்போக அது நீக்கப்பட்டது. அதன் பின்னரும் புலிப்பயம் கூறி பாதுகாப்பு கேட்டபோது, தேர்தல் காலங்களில் தனியாகத் திரிந்தவருக்கு இப்போது எதற்குப் பாதுகாப்பு என்று முன்னாள் கடற்படைத் தளபதியும் அமைச்சருமான சரத் வீரசேகர கேள்வியெழுப்பி அதனைத் தடுத்துவிட்டார். இது சுமந்திரன் பற்றிய கதை.

அண்மைய சில நாட்களில் வரப் போகும் தேர்தலையொட்டிய செயற்பாடுகளில் இறங்கியுள்ள இவருக்கு இவரைப் பன்னாடை, மாலைகளுடன் வீதிகளில் காண முடிகிறது. ஆனாலும் உயிர்பாயம் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி மீண்டும் ராணுவப் பாதுகாப்பைப் பெற ஒருவகை முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பார்க்கப் போனால், தெற்கிலும் வடக்கிலும் ஒரே பாணி தான்.

நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்ட சுமந்திரன் தாம் ஒரு சட்டத்தரணியென்றும், அரசியலில் தொடர வேண்டிய தேவையில்லையென்றும் கூறி, புதிய அரசியலமைப்பு வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி அரசியலை விட்டு போய்விடுவேன் என்று கூறிவிட்டு, இன்றும் அதற்குள்ளிருந்தே குத்துக்கரணம் அடித்துக் கொண்டிருக்கிறார்.

> **தேர்தல் வெற்றிக்காக தமிழினத்தைக் கூறுபோட்டு மேடையேறிக் கடை விரிப்பதற்கு தமிழ்த் தேசியம் ஒரு விற்பனைச் சரக்கல்ல என்பதை புரிந்து கொள்ளத் தவறினால், தமிழர் தாயக மக்கள் இலங்கைத் தேசியத்துக்கு தங்களை அடகு வைப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.**



தேர்தல் என்று வரும்போது இவர் பற்றிய இன்னுமொரு விடயம் நன்றாக நினைவுக்கு வருகிறது. 2020ம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னராக - மே மாதத்தில் சிங்கள இணைய ஊடகமொன்றுக்கு நீண்ட செவ்வியொன்றை இவர் வழங்கியிருந்தார். சமுதித்த என்ற ஊடகர் இச்செவ்வியின்போது கேட்ட ஒரு முக்கிய கேள்வியும் அதற்கான சுமந்திரனின் பதிலும் பின்வருமாறு அமைந்திருந்தது:

கேள்வி: இந்தத் தேர்தலில் நீங்கள் வெற்றி பெறுவீர்களா?

பதில்: நிச்சயமாக.

கேள்வி: அந்த ஐம்பத்தெட்டாயிரம் வாக்குகள் (முன்னைய தேர்தலில் பெற்றது) உங்களுக்குக் கிடைக்குமா?

பதில்: அதைவிட இரண்டு மடங்கை என்னால் பெற முடியும். ஒரு லட்சத்துக்கு மேல் எனக்கு வாக்குகள் கிடைக்கும்.

கேள்வி: இது ஒரு சவாலா?

பதில்: சவால்தான்.

கேள்வி: சுமந்திரன் வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பதில்: அவர்கள் எனக்கு வாக்களிக்கவே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுவே அந்தச் செவ்வியின் இறுதிக் கேள்வி பதிலாக அமைந்திருந்தது.

2010ல் தேசியப்பட்டியலால் எம்.பி.யாகி, 2015 தேர்தலில் 58,000 வரையான வாக்குகளைப் பெற்ற சுமந்திரன் 2020ம் ஆண்டுத் தேர்தலில் முன்னரில் பார்க்க ஐம்பது வீதமளவில் குறைவாக, 27,843 வாக்குகளை மட்டுமே சிறீதரனின் அனுசரணையால் பெற்று, அதே சிறீதரனுக்கு குழிபறிக்கப் புறப்பட்டு 2024ம் ஆண்டுத் தேர்தலில் படுதோல்வி கண்டவர்.

தெற்கின் சிங்கள ஊடகவியலாளர்கள் வடபகுதி மக்களின் நாடியை அறிந்திருந்த அளவுக்கு, சுமந்திரனால் 2020லும் 2024லும் அறிய முடியாது போனது அவர் முன்னர் ஒருதடவை குறிப்பிட்டதுபோல அவர் தமிழர் தேச அரசியலுக்குத் தகுதியானவர் அல்ல என்பதை நிரூபித்துள்ளது.

கடந்த பதினைந்து வருட தமிழர் அரசியலைத் திரும்பிப் பார்க்கின் சுமந்திரனின் வகிபாகமும் அவரை நம்பி தமிழரசை வழிநடத்திய இரா.சம்பந்தனின் முன்னறிவும் எந்தளவுக்கு தமிழரசுக் கட்சியை மட்டுமன்றி தமிழ்த் தேசியத்தையும் பேரழிவுக்குள் தள்ளியுள்ளது என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது. இதனாலேயே தமிழரசுக் கட்சிக்கு பதில் தலைவர், பதில் செயலாளர், ஒரு பேச்சாளர், நாடாளுமன்றக் குழுவுக்கொரு தலைவர், அங்கொரு பேச்சாளர் என்று எல்லாமே பதவி மோகமாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடைபெறப் போவதாக வந்திருக்கும் அறிவிப்பு தமிழ்த் தேசியம் என்று தம்மை அறிமுகப்படுத்தும் எல்லோரையும் திணற வைத்துள்ளது. நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் எடுத்த முயற்சிக்கு சிறீதரன் எம்.பி.யின் ஆதரவு ஆரம்பத்தில் இருந்தது. ஆனால், அதனை உட்கட்சி மோதல் தடுத்துவிட்டது. பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அடுத்தடுத்து விட்ட அறிக்கைகளும் ஊடக சந்திப்புகளும் முன்னுக்குப்பின் முரணாக இருந்தது. தமிழரசுக் கட்சி தனித்தே போட்டியிட வேண்டுமென்ற நிலை சுமந்திரனால் கொண்டு வரப்பட்டுள்ளது,

மறுபுறுத்தில் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். உட்பட ஒன்பது தமிழ் கட்சிகள் கூட்டாக தேர்தலைச் சந்திக்க இணக்கம் கண்டுள்ளதாக செய்தி வெளியான மறுநாளே பசுமை இயக்கம் அதனை மறுத்துவிட்டது. இந்த நேரத்தில் நாடாளுமன்ற வரவு செலவு திட்ட வாக்களிப்பின்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதனை எதிர்த்து வாக்களிக்க, சிறீதரனின் தமிழரசுக் கட்சிக்காரரர் வாக்களிப்பை பகிஸ்கரிக்க, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அதனை ஆதரித்து வாக்களித்தார். இத்தோடு இணைப்புகள் என்பது புஷ்வாணமானதுபோல் தெரிகிறது.

நிலைமை சாதகமில்லாததை அறிந்து கொண்ட தமிழரசின் பதில் தலைவர் சுமந்திரன் பாணியில் தமது கட்சி தனித்தே போட்டியிடும் என்ற தகவலை வெளிப்படுத்தியுள்ளார். அதேசமயம் ஒன்பது கட்சி இணைப்பில் பங்குபற்றாத பசுமை இயக்கத்துக்கு ஒரு பிரதேச சபையை ஒதுக்கிக் கொடுத்து அவரை வெல்ல வைப்பதற்கும் ஏற்பாடாகி வருவதாக உள்வீட்டுக்குள்ளேயே பேசப்படுகிறது.

உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் நிச்சயமாக நடைபெறுமாயின் அநுர குமார அணி இதற்குள் புகுந்து விளையாடும் உத்தியை கச்சிதமாக செய்யும். கடந்த பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கில் இந்த அணிக்குக் கிடைத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உற்சாகமாக




களத்தில் இறங்கி ஒவ்வொரு சபைகளிலும் குறிப்பிட்ட எண்ணிக்கைகளை கைப்பற்றுவதற்கு ஏற்பாடாகி வருகிறது.

பாசையூர், வல்வெட்டித்துறை பட்டினங்களில் அநுர குமார பங்குபற்றிய பிரமாண்ட கூட்டங்கள் இதற்கான ஒத்திகை. கடந்த வார வரவு செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாண பொதுநூலகத்துக்கும் வட்டுவாகல் பாலத்துக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதான அறிவிப்பும் அரசதுறையில் பணிபுரிவோருக்கான அடிப்படைச் சம்பள உயர்வு அறிவிப்பும் ஆட்சித்தரப்பினரின் உள்ளூராட்சித் தேர்தலுக்கான விஞ்ஞாபனமாக பார்க்கப்பட வேண்டியவை.

இவைகளைப் புரிந்து கொள்ளாது தமிழ்த் தேசியம் என்ற சுலோகத்துடன் தேர்தலைச் சந்தித்தால் தங்களுக்கு சில உறுப்பினர் பதவிகளாவது கிடைக்குமென மனப்பால் குடித்துக் கொண்டிருப்பவர்கள், கடந்த பொதுத்தேர்தலில் தாங்கள் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டோம் என்பதை அமைதியாக இருந்து சிந்திக்க வேண்டும்.

தேர்தல் வெற்றிக்காக தமிழினத்தைக் கூறுபோட்டு மேடையேறிக் கடை விரிப்பதற்கு, தமிழ்த் தேசியம் ஒரு விற்பனைச் சரக்கல்ல என்பதை புரிந்து கொள்ளத் தவறினால், தமிழர் தாயக மக்கள் இலங்கைத் தேசியத்துக்கு தங்களை அடகு வைப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். இதுதான் நிலைமையாகுமானால் ஊடகர் சமுதித்தவுக்கு வழங்கிய செவ்வியில் சுமந்திரன் கூறியது போல சிங்கக்கொடியும், சிங்களத் தேசிய கீதமுமே தமிழ்த் தேசத்துக்கும் உரிமையாகிவிடலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமுத்திர பிராந்தியத்தில் வளர்ந்து வரும் புவிசார் அரசியல் போட்டிக்குள்

# இலங்கையின் வடக்கு மீனவர்கள் சிக்கிக் கொள்கிறார்களா?



யதீந்திரா

“இந்தியாவிற்கு எதிராக எங்களைப் பயன்படுத்த நாங்கள் அனுமதிக்கமாட்டோம் - எங்களுக்கு உதவ முன்வரும் எவரிடமிருந்தும் உதவிகளைப் பெறுவோம் - அந்த அடிப்படையில் சீனா எங்களுக்கு உதவ முன்வந்த போது, அதனைப் பெற்றோம் - அதற்காக கடல் பிராந்தியத்தில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் நோக்கில், சீனா எங்களை பயன்படுத்த முடியாது - நாங்கள் அதற்கு அனுமதிக்க மாட்டோம்,” என்று யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் தலைவர் பெப்ரவரி 18, 2025 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது கூறினார். இந்தச் செய்தியானது, பெப்ரவரி 19இல் ஈழநாட்டில் பிரசுரமாகியிருந்தது.

இதற்கிடையில், யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட உள்ளூர் ஊடகங்கள், வட இலங்கையின் தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மண்டைதீவு, ஊர்காவல்துறை மற்றும் புங்குடுதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள், இந்த வாரம் 27 ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் உள்ள மீன்பிடித் திணைக்கள அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்யத் திட்டமிட்டுள்ளதாக செய்திகளை வெளியிட்டிருந்தன. (இந்த ஆர்ப்பாட்டம் குறித்த திகதியில் இடம்பெற்றிருந்தது, ஆங்கிலக் கட்டுரை அதற்கு முன்னரே வெளிவந்திருந்தது) இந்த மாத தொடக்கத்தில், இலங்கைக்கான சீன தூதரகத்தின் மூத்த அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் உல்லாச விடுதி ஒன்றில், வடபுல மீனவர் தலைவர்களின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தனர், இதன் போது, இந்திய மீனவர்களின் இழுவைப் படகு மீன்பிடியால், தாங்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பில் குறித்த மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சீன அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர்.

“இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள்” என்ற வகைப்படுத்தலும் “வடக்கு மீனவர்களின்” எதிர்ப்பு என்பதும்தான், இந்த விடயத்தில் சீனாவை தொடர்புபடுத்துகின்றது. மேலும், இந்த நிலைமை இந்து சமுத்திர பிராந்தியத்தில், இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் காணப்படும் பதட்டங்களில் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மீனவர்கள் மீது தாங்கள் அனுதாபம் கொண்டிருப்பதான தோற்றப்பாட்டை காண்பிப்பதில் சீனா ஆர்வம் காண்பிப்பதாகத் தெரிகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் மீது காண்பிக்கப்படும் அனுதாபமானது, இறுதியில் அனுதாபம் காட்டுபவர்கள் மீதான நல்லெண்ணமாக மாறக்கூடும் என்பதை குறைத்து மதிப்பிட முடியாது.

தென்னிந்திய மீனவர்களால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக வடக்கு மாகாண மீனவர் சங்கங்கள் நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகின்றன. இருப்பினும், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதில் தொடர்ந்து இழுபறியே நிலவுகிறது. அத்துமீறும் தென்னிந்திய மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுகிறார்கள், மேலும் அவர்களின் உடைமைகள் இலங்கை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படுகின்றன. தென்னிந்திய மீனவர்கள் கைது செய்யப்படும்போது, அது தமிழ்நாட்டில் அரசியல்மயமாக்கப்படுகிறது, அதே நேரத்தில் இலங்கையில் உள்ள வடக்கு மீனவர்கள் தென்னிந்திய மீனவர்களின் வேட்டையாடலைக் கண்டித்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்தப் பிரச்சினை இரு பக்கத்திலும்



உள்ளூர் அரசியலாகவும் மாறியிருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு மனிதாபிமான அணுகுமுறையை கைக்கொள்ளுமாறு, புது தில்லி தொடர்ந்தும் வலியுறுத்திவருகிறது.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதால், வட மாகாணக் கடலோர சமூகத்தினரிடையே இந்திய மீனவர்கள் மீதான வெறுப்பு வலுப்பெற்றுள்ளது. கடந்த காலங்களில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் முன்பு மீனவர் சங்கங்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டிருக்கின்றன. ஒரு வகையில், இந்தப் பிரச்சினை இந்தியா மீது குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கான உள்நாட்டு காரணியாக மாறியுள்ளது. இந்தப் பின்னணியில்தான் இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் வட மாகாண மீனவர்களை அணுகியது, அதுவே, பின்னர் கிழக்கு மாகாணத்தை நோக்கியும் விரிந்தது.

இருப்பினும், வரலாற்று ரீதியாக நோக்கினால், 2021 வரையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களை நோக்கி சீனா ஒரு போதும் உதவிக்கரம் நீட்டியதில்லை.

**ஈழத் தமிழர்களின் சர்வதேச தொடர்பு என்பதில் எப்போதுமே, இந்தியாதான் முதன்மையானதாக இருந்திருக்கின்றது. ஈழ மக்களின் கவனமும் இந்தியாவைச் சுற்றித்தான் இருந்திருக்கின்றது. இந்த யதார்த்தத்தை சீனா நிச்சயமாக குறைத்து மதிப்பிடாது. இருப்பினும், இந்த நிலைமை மாற்றமடை முடியாத ஒன்றல்ல என்றும் சீனா கருத இடமுண்டு.**

டிசம்பர் 2021 இல், சீனத் தூதுவர் குய் ஜென்ஹாங் முதன்முறையாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். வடக்கில் உள்ள தமிழர்களின் மனநிலையை அளவிடுவதற்கான ஆரம்ப வருகையாக அது அமைந்திருந்தது. இந்தப் பயணத்தின் போது, யாழ்ப்பாண நடுத்தர வர்க்கத்தின் கலாச்சார அடையாளமாகக் கருதப்படும் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் யாழ்ப்பாண பக்தர்களுடன் வேஷ்டி (இந்து பாரம்பரிய உடை) அணிந்து சீனத் தூதுவர் வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தார். அதேபோல், தமிழ் தேசிய அரசியலில் ஒரு குறியீடாக நோக்கப்படும் யாழ்ப்பாண நூல் நிலையத்திற்கும் அவர் விஜயம் செய்திருந்தார்.

இந்த விஜயத்தின் போது, இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்திற்கு 20 மில்லியன் மதிப்புள்ள உலர் உணவுப் பொருட்களை வழங்கியதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மீனவ சமூகங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட வீட்டுத் திட்டம், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் நிவாரணப் பொதிகளுக்காக ரூபா 1.5 பில்லியன் மதிப்புள்ள மனிதாபிமான உதவிகளையும் வழங்குவதற்கான உறுதிமொழியையும் வழங்கியிருந்தார். “இது ஆரம்பம், முதல் கட்டம் மட்டுமே” என்றும், ஜென்ஹாங் யாழ்ப்பாணத்தில் உள்ள மீனவர்களுக்கு உறுதியளித்திருந்தார்.

2023 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு சீனத் தூதுவர் விஜயம் செய்திருந்தார். “நீங்கள் கடந்த காலத்தில் எத்தகைய சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டிருக்கலாம் ஆனால், எதிர்காலத்தில் உங்களுடன் நிற்பதில் சீன மக்கள் உறுதியாக இருக்கின்றனர்” என்று, ஜென்ஹாங் வலியுறுத்தினார். மேலும், “சீன முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் வடக்கு மாகாணத்திற்கு வருவதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். அதற்கான ஆற்றல் எங்களிடமுண்டு, சீன முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை வடக்கு மாகாண மக்கள் அன்புடன் வரவேற்பார்கள் என்றும் நம்புகிறேன்”

2024 நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, வடக்கிற்கு விஜயம் செய்த முதல் வெளிநாட்டு இராஜதந்திரி சீனத் தூதுவர் ஆவார், ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு உதவும் விடயத்தில் தமிழர்கள் “சரியான முடிவை” எடுத்திருப்பதை, சீனா பாராட்டுவதாகக் குறிப்பிட்டிருந்த தூதுவர், அதனை பெரிதும் வரவேற்றிருந்தார். தேசிய மக்கள் சக்தியின் பிரதான கட்சியான ஜே.வி.பியானது, மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆளணியைக் கொண்டிருக்கும் ஒரு கட்சியாகும். வரலாற்று ரீதியாக, வடக்கை தளமாகக் கொண்ட தமிழ் மக்கள் பெரும்பான்மையாக, தமிழ் தேசியவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளுக்கே வாக்களித்திருக்கின்றனர். ஆனால் முதல் முறையாக, அவர்கள் தெற்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய கட்சி ஒன்றை நோக்கித் திரும்பியிருக்கின்றனர்.

இலங்கையின் இனத்துவ அரசியல் விவகாரத்தைப் பொறுத்தவரையில், மற்றைய நாடுகளின் “உள் விவகாரங்களில் நாங்கள் தலையிட மாட்டோம்” என்பதை சீனா மிகவும் தந்திரமாக பயன்படுத்துவதுண்டு. அந்த அடிப்படையில், இலங்கையின் இனவிவகாரத்தில் கருத்துச் சொல்வதை எப்போதுமே, தவிர்த்து வந்திருக்கும் சீனா, தற்போது, தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருப்பதை பாராட்டுவதாகக் கூறுகின்றது. அதனை வரவேற்கின்றது - இது அடிப்படையிலேயே முரண்பாடானது. இதிலும் ஒரு விடயம் பொதிந்திருக்கின்றது - அதாவது, தமிழ் மக்களின் இனப் பிரச்சினை என்று வருகின்றபோது, அதில் தலையிடும் பிரதான நாடாகவும், அதில் உரித்துள்ள நாடாகவும் இந்தியா முதன்மை பெறுகின்றது. தமிழர் விவகாரத்தில் இந்தியாவிற்கு ஒரு பிரத்தியேக குரல் இருக்கின்றது. எனவே, தமிழ் மக்கள் ஒரு சிங்கள தேசியக் கட்சியை நோக்கித் திரும்பிவிட்டால், அதன் பின்னர், தமிழர் பிரச்சினையில் இந்தியாவிற்கான குரல் அற்றுப் போய்விடலாம் என்றும் சீனா கருத இடமுண்டு.

இப்போது ஒரு விடயம் தெளிவானது - அதாவது, ஆரம்பத்தில் இலங்கையின் தெற்குப் பகுதியில் மட்டுமே தனது பிரதான ஆர்வத்தைக் காண்பித்திருந்த சீனா, இப்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அதிக ஆர்வத்தைக் காண்பித்து வருகிறது. கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு வந்ததன் பின்னரான அரசியல் சூழலில், கொழும்பு மேலும் சீனாவின் மடியை நோக்கித் தள்ளப்பட்டது, சில தகவல் மூலங்களின்படி, கோத்தபாய ராஜபக்ச அரசாங்கம் வடக்கு இலங்கையில் பல சீனத் திட்டங்களுக்கான கதவை திறந்துவிட முயற்சித்தது. அதற்கான வசதிகளை செய்து கொடுக்க முற்பட்டது. கோத்தபாயவின் ஆட்சிக் காலத்தில், கிழக்கு மாகாணத்தின் முக்கிய தொடர்பு புள்ளியாக இருந்த, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், சீனாவுடன் நெருக்கமாகப் பணியாற்ற ஆர்வமாக இருந்தார். திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான நிலம் மற்றும் புல்மோட்டை கனிம மணலில் முதலீடு செய்வது உள்ளிட்ட சீனத் திட்டங்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலம், மற்றும் சாத்தியமான முதலீட்டுத் திட்டங்கள் குறித்து அவர், சீன அதிகாரிகளுக்கு நம்பிக்கையளித்திருந்தார். சீனாவின் யுனான் மாகாணத்துடன் ஒத்துழைக்கும் திடமொன்றையும் ஊக்குவித்தார், அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆளுநர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பிறகும், சீனாவின் யுனான் மாகாண ஆளுநர் வாங் யூபோவை சந்தித்திருந்தார், இதன் போது, யுனான் மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இடையிலான உறவை வளர்ப்பதற்காக அனுராதா மேற்கொண்ட அர்ப்பணிப்பு மிக்க முயற்சியை வாங், பாராட்டினார்.

கிழக்கு ஆளுநரின் முயற்சிகளுக்கு அப்பால், கிழக்கு மாகாணத்தில் தனது காலடித்தளத்தை, பதிப்பற்கான இடங்களைத் தேட சீனா ஆர்வமாக இருந்தது. கிழக்கு மாகாணத்தில் உள்ள கயாகேர்னி தொல்பொருள் தளத்திற்கு சீனத் தூதுவர் விஜயம் செய்தபோது, இலங்கையின் கிழக்கு கடற்கரையானது, எப்போதும் கடல்சார் பட்டுப்பாதையில் ஒரு முக்கியமான உலகளாவிய வர்த்தக மையமாக இருந்திருக்கின்றது என்பதை அவர் சுட்டிக்காட்டியிருந்தை இந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும்.

சீனா ஏன் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஊடுருவ

(14ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்துக்கு எதிராக பாதாளக் குழுக்கள் முடுக்கிவிடப்படுகின்றனவா?



கந்தையா அருந்தவபாலன்

கடந்த இரண்டு வாரங்களில் தலைநகர் உட்பட நாட்டின் தென்பகுதியில் அதிரச்சியூட்டும் வகையில் பல்வேறு படுகொலைகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. அதுவும் மிகவும் பாதுகாப்பான நீதிமன்றக் கூட்டிலும் மக்கள் அதிகமாக நடமாடும் பொது இடங்களிலும் திட்டமிட்டவகையில், மிகவும் சாதுரியமாக, குறுகிய கால இடைவெளியில், அடுத்தடுத்து, இவை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், எதிர்கட்சியினர் அனைவரும் உடனடியாகவே இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென கோரஸ் பாடியதையும் அவதானிக்கும் போது இதன் பின்னால் வலுவான ஒரு நோக்கம் இருக்கக்கூடும் என ஐயுறவேண்டியுள்ளது. குறிப்பாக ஆட்சிச் சுகத்தை வரம்பின்றி சுகித்திருந்த முன்னைய ஆட்சியாளர்களது அதிகாரம் பறிபோனது மட்டுமன்றி அவர்களின் கடந்தகால மோசடிகளுக்காக அவர்களின் கழுத்துக்கு மெல்ல மெல்ல சுருக்குக்கயிறு புதிய ஆட்சியில் பின்னப்பட்டுக் கொண்டு வருவதால் அதனைத் திசை திருப்பும் வகையில் புதிய அரசாங்கத்துக்கு அவர்களால் விடுக்கப்படும் இன்னொரு சவாலாகவே இது பலராலும் நோக்கப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சுக்கான பாராளுமன்ற விவாதத்தின் போதான ஜனாதிபதியின் உரையிலும் இது பிரதிபலித்துள்ளதைக் காணமுடியும். இவ்வாறு பரவலாக ஐயம் எழுவதற்கான பிரதான காரணம் இலங்கையிலுள்ள பாதாளக் குழுக்களில் பெரும்பாலானவை முன்னைய ஆட்சியாளர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட வெறி நாய்கள் என்பது பகிரங்க இரகசியம்.







நீண்டகாலமாகவே இலங்கையில் பல அரசியல்வாதிகள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவும் அரசியல் நோக்கங்களுக்காகவும் இந்தப் பாதாள உலகக் குழுக்களை பயன்படுத்தி வருகின்றனர் என ஆதாரபூர்வமாக பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதில் அரசியல்வாதிகள் தமக்காக உருவாக்கிக்கொண்ட குழுக்களும் உள்ளன. பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைத் தமக்கான குழுக்களாக மாற்றிக்கொண்டதும் உண்டு. சஜித்தின் தந்தையான ரணசிங்க பிரேமதாச இதில் முன்னோடியாகக் கருதப்படுகிறார். அவரின் அமைச்சரவையில் முக்கிய பொறுப்பிலிருந்த சிறிசேன கூரே கூட பாதாளக்குழுவின் பிரதானியாகக் கருதப்பட்ட ஒருவர். இவ்வாறாகச் சிலர் முதலில் அரசியல்வாதிகளின் எடுபிடிகளாக இருந்து, பின்னர் படிப்படியாக அரசியலில் முன்னேறி பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக வந்த வரலாறுகளும் உண்டு. அரசியல்வாதிகளின் தயவிலிருப்பதைவிட அரசியல்வாதியாகவே அதுவும் ஆட்சியில் இருக்கும் அரசியல்வாதியாக இருந்துவிட்டால் அவர்களின் நடவடிக்கைகளுக்கு நூறுவீத உத்தரவாதம் இருக்கும்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில்தான் பாதாளக்குழுக்களின் செயற்பாடுகள் உச்சம் பெற்றிருந்தன. இதற்கு உள்நாட்டு யுத்தமும் நல்ல வாய்ப்பை அவர்களுக்குக் கொடுத்திருந்தது. பயங்கரவாதத்தை அழித்தல் என்ற பெயரில் எல்லாப் பயங்கரவாதச் செயல்களையும் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்கிடைத்தது. ஊழல் முறைகேடுகள், படுகொலைகள் போன்றவற்றை விரும்பியவாறு செய்வதற்கும் அதற்கேற்ப சட்டத்தை வளைப்பதற்கும் அவர்களால் முடிந்தது. நவீன ஆயுதங்கள் இவ்வாறான குழுக்களுக்கும் தனிநபர்களுக்கும் கிடைப்பதற்கும் யுத்தம் வாய்ப்பளித்தது. அதுமட்டுமல்ல அத்தகைய நடவடிக்கைகளுக்கு பாதுகாப்புத் தரப்பிலிருந்தும் காவல் துறையிலிருந்தும் ஆளணிகளைப் பயன்படுத்தவும் முடிந்தது. அவ்வாறான நபர்களுக்கு பதவி உயர்வுகளும் சலுகைகளும் தாராளமாகவே வழங்கப்பட்டிருந்தன. இதன் விளைவே இன்று பாதாளக்குழுச் செயற்பாடுகளில் உள்ளவர்களில் கணிசமானவர்கள் முப்படைகளையும் காவல்துறையையும் சேர்ந்தவர்களாக இருப்பது. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னணி. இதுபோலவே கோதாபயவின் அனுசரணையிலான 'அவன்காட்' சேவையும். இவர்களில் ஒரு பகுதியினர் பணியிலிருப்பவர்களாகவும் மறுபகுதியினர் அப்பணிகளிலிருந்து விலகியவர்களாகவும் உள்ளனர். இதற்குமேலாக இன்று சட்டம் மற்றும் நீதித்துறையிலும் இந்நிலை புகுந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதாளக் குழுவினர் அரசியல்வாதிகளாகவோ அல்லது அரசியல்வாதிகளின் செல்லப்பிள்ளைகளாவோ இருந்து கொண்டு ஒப்பந்தக்கொலைகளில் ஈடுபடுவது மட்டுமன்றி தேச, சர்வதேச போதைப்பொருள் வர்த்தகத்துடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்களாக உள்ளனர். இவர்களில் பலர் கொலைகள், போதைப்பொருள் விநியோகம் போன்ற பல சட்டவிரோதச் செயற்பாடுகளை வெளிநாடுகளில் இருந்துகொண்டு இங்கு அரங்கேற்றி வருகின்றனர். அதேபோலவே சிறையிலிருந்து கொண்டே வெளியில் நடத்தி முடிக்கின்றனர். அதற்கேற்றவகையில் பரந்த வலையமைப்பை அவர்கள் கொண்டிருப்பதுடன் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அத்துறைசார் பணியாளர்களின் ஆதரவையும் பெற்றிருக்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து இவ்வாறான குற்றவியலில் ஈடுபட்டு வந்தவர்களில் 19 பேர் அண்மையில் கைது செய்யப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளனர். அத்துடன் 300 பேர்வரையில் வெளிநாடுகளில் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட 58 குழுக்களில் 1400 க்கும் மேற்பட்ட பாதாளக் குழு உறுப்பினர்கள் இருப்பதாகப் பதில் காவல்துறை மாஅதிபர் பிரியந்த வீரசூரியா தெரிவிக்கின்றார். இவற்றுள் ஐந்து மிக வலிமை வாய்ந்த குழுக்களாக உள்ளன. கோணவல சுனில், ஜூலாம்பிட்டிய அமேரே, வம்பொட்ட, பெத்தகனே சஞ்சீவ போன்றவர்களின் தலைமையிலான குழுக்கள் இதனுள் அடங்கும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கொலைகளுடன் தொடர்புடையவர்களாகக் கைதுசெய்யப்பட்டவர்களுள் ஒரு இராணுவ வீரன், 7 முன்னாள் இராணுவ வீரர்கள், ஒரு விமானப்படை வீரர், இரு பொலிஸ் அதிகாரிகளும் உள்ளனர். இவற்றின்மூலம் இலங்கையில் பாதாள உலகக் குழு எவ்வாறு வலிமையான கட்டமைப்புடன் இயங்குகின்றது என்பதை அறியலாம்.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் அவ்வப்போது அங்கொன்று இங்கொன்றாக நடந்து வந்த நிலைமாறி ஒரேநேரத்தில் தாக்குதலை அதுவும் மோசமாக ஏன் தொடுக்கவேண்டும்? குறிப்பாக ஐந்து பிரதான குழுக்களும் ஒரேநேரத்தில் தற்போது களத்தில் இறங்கியுள்ளதன் பின்னால் யார் இருக்கிறார்கள் அதன் தோக்கம் என்ன என்ற கேள்வியை ஜனாதிபதியும் எழுப்பியிருப்பதைக் காணலாம். அதுமட்டுமல்ல கொல்லப்பட்டவர்களும் பாதாளக் குழுக்களைச் சேரந்தவர்களாக இருந்ததுடன் அவர்கள் முன்னைய ஆட்சியாளர்களுடன் நெருக்கமானவர்களாகவும் இருந்தமை அறியவந்துள்ளது. இந்நிலையில்தான் மகிந்தவின் புதல்வர்களான நாமல்,யோசித என்பவர்களின் கைதும், சுட்டுக்கொல்லப்பட்ட பாதாள குழுவைச் சேர்ந்த அனுரவிதான கமகே என்பவர் கொல்லப்படுவதற்கு முன் ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கிய செவ்வியும் முக்கியம் பெறுகின்றன. அனுரவிதான கமகே அண்மையில் தனது இரு பிள்ளைகளுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார். கொலை செய்யப்படுவதற்கு முன் ஊடகவியலாளர் சமுதிதா என்பவருக்கு வழங்கிய செவ்வியில் ராஜபக்ஷ குடும்பத்திற்குத் தான் பல ஊத்தை வேலைகள் (Dirty work) செய்ததைப்பற்றிக் குறிப்பிட்டதுடன் தாஜூதீன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் சண்டி மல்லி எனப்படும் ரஞ்சித் என்பவர்களின் கொலைக்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்குமான தொடர்பு பற்றியும் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதன்பின்னரே அவர் கொலை செய்யப்பட்டிருந்தார். சண்டி மல்லியின் கொலை வழக்கு எதுவித விசாரணைகளுமின்றி 22 வருடங்களாக சட்டமா அதிபர் பணிமனையில் தூங்குவாதாக அவரது மகன் குறிப்பிட்டுள்ளார். கமகேயைப் போலவே அண்மையில் கொலை செய்யப்பட்ட பாதாளக் குழு பிரமுகர்களுக்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்குமிடையில் வெவ்வேறு விடயங்களில் தொடர்புகள் இருந்திருக்கலாம். புதிய அரசாங்கம் தொடங்கியிருக்கும் மோப்பப்பிடிக்குள் இவர்களும் சிக்கி உண்மைகளைக் கக்கி விடுவார்களோ என்ற நோக்கிலும் இவ்வாறான கொலைகள் இடம்பெற்றிருக்கலாம்.

எவ்வாறெனினும் பல்வேறு பிரச்னைகளுக்கு முகங்கொடுப்பதில் திணறிக் கொண்டிருக்கும் புதிய அரசாங்கத்துக்கு பாதாளக்குழுக்களின் இத்திடீர் தாக்குதல் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது என்பது உண்மை. குறிப்பாக இத்தாக்குதலை மையமாகவைத்து தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது என்ற எதிர்த்தரப்பினரின் கூப்பாடு ஏலவே இவ்வரசாங்கத்தின்மீது சுமத்தப்படும் பலவீனமான ஆட்சி என்ற விம்பத்தை மேலும் மக்கள் மத்தியில் வலுவாக்கிவிடுமோ என்ற அச்சத்தை ஆளுந்தரப்பிடையே தோற்றுவித்துள்ளது. அதன்காரணமாகவே அனுர உடனடியாக பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து அதுதொடர்பாக விளக்கமளித்ததுடன் பின்னர் தனது பாராளுமன்ற உரையிலும் அதற்கு முக்கியத்துவத்தை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் புதிய அரசாங்கத்துக்கு இதுவும் ஒருவகையான சவாலாக இருப்பினும் இதன்மூலம் நல்லவிடயங்கள் எதிர்காலத்தில் நடப்பதற்கு வழியும் பிறந்திருக்கிறது. இதன்மூலம் படையிலிருந்து தப்பியோடியவர்களைக் கைது செய்தல், சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்றல், பாதுகாப்புப் படைகள் உட்பட அரச துறைகளில் இருக்கும் பாதாளக்குழு ஆதரவாளர்களை இனங்காணல், போதைப்பொருட்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்தல், முன்னைய குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்துதல் போன்றன நடக்கும் என எதிர்பார்க்கலாம்.

புதிய அரசாங்கத்துக்கு இதுவும் ஒருவகையான சவாலாக இருப்பினும் இதன்மூலம் நல்லவிடயங்கள் எதிர்காலத்தில் நடப்பதற்கு வழியும் பிறந்திருக்கிறது. படையிலிருந்து தப்பியோடியவர்களைக் கைது செய்தல், சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்றல், பாதாளக்குழு ஆதரவாளர்களை இனங்காணல், போதைப்பொருட்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்தல் போன்றன நடக்கும் என எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட இணைய வேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எழுத்துமூலம் அழைப்பு விடுத்துள்ளாராமே. இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழ் எம்.பிக்கள் எல்லோரும் இணையவேண்டும் என்று இதற்கு முன்னர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்திருந்தாரே. இப்படியே ஆள்ஆளுக்கு அழைப்பு விடுக்கிறார்களே தவிர, எதனையும் உருப்படியாக செய்வதாகத் தெரியவில்லையே.



**வியுக்தியார்:** ஒரு குழுவாக செயல்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தால் மாத்திரம் போதும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள் போல் தெரிகின்றது. அவ்வாறு கோரிக்கை விடுப்பதற்கு முன்னர்தான், அண் ணர் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்தார். ஒரு தொகுதி தமிழ்பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவுசெலவுத்திட்டத்தை எதிர்க்க, தமிழ் அரசு எம்.பி.க்கள் வாக்கெடுப்பை பகிஷ்கரிக்க, முன்னணி கஜேந்திரகுமார் எதிர்த்து வாக்களித்தார். அரசாங்கத்தில் உள்ள தமிழ் எம்.பி.க்கள் ஆதரவாக வாக்களித்தனர். இப்படி வரவு செலவுத்திட்டத்தை எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து எதிர்த்தும் வாக்களிக்காமல், தமிழ் அரசுக்காரர்களோடு சேர்ந்து பகிஷ்கரிக்காமல், அரச எம்.பி.க்களோடு சேர்ந்து ஆதரித்து வாக்களித்துவிட்டுத்தான் அண்ணர் ஒற்றுமையாக இயங்குவோம் என்ற அறைகூவல் விடுக்கின்றார். தமிழ் மக்கள் இப்போது தெளிவாக இருக்கிறார்கள் என்பதைக் கூட இவர்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் இந்த அழைப்பு புலப்படுத்துகின்றது.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** 'பொருளாதாரம், உட்கட்சி நெருக்கடிகள் மூலம் மக்கள் போராட்டத்தின் மூலம் எமது ஆட்சியை வீழ்த்துவோம் என்று நினைத்தால் அது ஒரு கனவு மட்டுமே" என்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறாரே. இதுபோன்ற ஒரு கருத்தை அண்மையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் தெரிவித்திருந்தார். அவர்கள் இப்படி சொல்வதைப் பார்த்தால், அப்படி யாரோ முயற்சி செய்வதுபோல அல்லவா இருக்கின்றது. மூன்றில் இரண்டு பலம்வாய்ந்த இந்த அரசாங்கத்தை யாராலும் வீழ்த்த முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?



**வியுக்தியார்:** அரசாங்கம் 'யானைப்பலத்துடன்" இருக்கிறது என்பது நீங்கள் சொல்வதுபோல உண்மைதான். ஆனால் அதற்காக அதனை வீழ்த்த முடியாது என்பதும் அல்ல. மக்கள் நினைத்தால் அது சாத்தியமானது என்பதும் நமக்கு அனுபவமானதுதானே. மூன்றில் இரண்டு பலத்துடன்தானே கோட்டாபாய ராஜபக்ஷவும் அதிகாரத்தில் இருந்தார். ஆனால் அவர் ஆட்சி செய்தது போல இவர்கள் ஆட்சிசெய்யவில்லை என்பதும், இந்த அரசாங்கம் என்னதான் தவறிழைத்தாலும் அது தனது ஐந்து வருட ஆட்சியை நிறைவுசெய்யும் என்பதும் நமக்கு தெரிந்ததுதான். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மூன்று வீத மக்களின் ஆதரவு மாத்திரமே இருந்தபோதிலும், விரத்தியடையாமல் தொடர்ந்து இந்த அரசியலில் பயணம்செய்தவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள். கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை மிக சாதுரியமாக கடந்து செல்கிறார்கள் என்றே நினைக்கிறேன். இதனால் அவர்களின் ஆட்சியை மக்கள் போராட்டத்தின் மூலம் வீழ்த்துவோம் என்று யாராவது நினைத்தால் அது அவர் சொல்வதுபோல கனவுதான். ஆனால், அதுவல்ல அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை, அன்று கோட்டாவின் ஆட்சிக்கு எதிராக மக்களை திரட்டி வீதியில் நின்று தாங்கள் போராடியதுபோல இன்று மக்களை திரட்டி போராட்டம் நடத்தக்கூடிய திராணியுடன் யாரும் இல்லை என்பது அவர்களுக்கு நன்றாக தெரிந்திருப்பதால்தான் அவர்கள் இப்படி சவால்விடுகிறார்கள். அவர்கள் நினைப்பதும் சரியானதுதானே. ஆனால் ஒரு சின்ன நெருடல், உட்கட்சி மோதல் மூலம் வீழ்த்த முடியாது என்கிறார் ஜனாதிபதி. அவர்செல்வதைப் பார்த்தால், உள்ளுக்குள் ஏதோ மோதல் இருப்பதுபோல அல்லவா தெரிகின்றது.

---

**செல்வா கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** தமிழ் போராட்ட அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைத்தனவா? - விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டனவா என்று பாராளு மன்றத்தில் கேள்விகளை எழுப்பிய தயாசிறி ஜயசேகர எம். பி. அத்துடன், பாதாள உலகக் குழுவினரிடம் உள் ளவை மக்கள் விடுதலை முன்னணியினரின் (ஜே. வி. பி.) ஆயுதங்களா? அரச படைகளிடம் இருந்து கைப்பற்றப் பட்ட 2,136 ஆயுதங்களை அவர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கவில்லை என்றும் தெரிவித்திருக்கிறாரே.



**வியுக்தியார்:** இரண்டாயிரத்து நான்காம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் தயாசிறி ஜெயசேகர, வடமேற்கு மாகாண முதலமைச்ச ராகவும் பின்னர் அமைச்சரவை அமைச்சாராகவும் நீண்டகாலம் இருந்தவர். அதுமட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராகவும் பதவி வகித்த ஒரு சட்டத்தரணி. அவர் அமைச்சாராக இருந்த போது கூட ஜேவிபி அரச படையகளிடமிருந்து கைப் பற்றிய ஆயுதங்களின் விபரங்களை இவ்வளவு துல்லிய மாக அறிந்து வைத்திருந்தவர் எதற்காக அப்போதெல் லாம் கேள்வி கேட்கவில்லை என்பது தெரியவில்லை. அதுவல்ல நமக்கு உறுத்துவது, தமிழ் போராட்ட இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனவா என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். அதற்கு பதிலளித்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.யும் தங்களிடம் ஆயுதங்கள் தற்போது இல்லை என்றும் தாங்கள் பயங்கரவாதத்திற்கு துணைபோகவில்லை என்றும் கூறியிருக்கிறார். தமிழ் மக்களின் உரிமைகளை பெறுவதற்காக ஆயுதம் ஏந்தியிருந்த தமிழ் போராட்ட இயக்கங்கள் எல்லாமே இந்திய படையினரிடம் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தபோது தயாசிறி அரசியலுக்கே வந்திருக்கவில்லைத்தான். ஆனால், தமிழ் இயக்கங்களிடம் ஆயுதங்களை வாங்கிய இந்தியாவும் தமிழர்களை கைவிட்டுவிட்டது. தமிழர்களின் பாதுகாப்புக்கென்று கொண்டு வந்த மாகாணசபைகளையும் எல்லோரும் கைவிட்டுவிட்டார்களே.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** வரவு - செலவு திட்டத்தில் 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் துண்டு விழும் தொகையை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என எந்த விடயமும் தெரிவிக்கப்படாமல் இருப்பதுடன், அரசாங்கத்தின் இலக்கை அடைந்துகொள்ள எடுக்கும் நடவடிக்கைகள் என்ன என்பதையும் அரசாங்கம் தெளிவாகக் குறிப்பிடவில்லை. ரணில் விக்கிரமசிங்க சட்டத்துக்கு உட்பட்டு தயாரித் துள்ள சட்டரீதியான வழியில் அரசாங்கம் செல்லா விட்டால் பேரழிவுக்கு முகம் கொடுக்க நேரிடும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளாரே?.



**வியுக்தியார்:** ரணில் வழியில் என்று அவர் சொல்வது, என்ன என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதானே. துண்டுவிழும் இரண்டு லட்சத்து இருபதாயிரம் கோடி ரூபாவையும் நாடுமுழுவதும் சில ஆயிரம் மதுபானச் சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுத்து சேர்க்கச் சொல்கிறாரோ தெரியவில்லையே. ரணில் சட்டத்துக்கு உட்பட்டு, முதலில் லைசென்சுக்கு என்று கட்டணம் அறவிடப்படாமல் கொடுத்த லைசென்சை, கட்டணம் வாங்கிக்கொண்டுதானே கொடுத்தேன் என்றாரே. அதைத்தான் சட்டத்துக்கு உட்பட்டு என்கிறார் என்று நினைக்கின்றேன். அதைவிட இந்த துண்டு விழும் தொகைகூட, ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப் பட்டால்தானே துண்டுவிழுவதற்கு.

---

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 9 கட்சிகள் இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக போட்டியிடுவதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்றும் கூட்டணிக்குள் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவ கட்சியின் வருகையே கூட்டணி குழப்பத்துக்குக்காரணம் என்று கூறப்படுகின்றதே. முதல்தடவையாக இவர்கள் சந்தித்து கூட்டணியாகப் போட்டியிடப்போவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் மறுநாள் மீண்டும் கூடி குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள் என்று செய்திகள் வருகின்றனவே.

**வியுக்தியார்:** நம்மவர்கள் சேர்ந்து இயங்குவது என்பது நடந்தால்தான் நீங்கள் குழப்பமடையவேண்டும். இப்போதெல்லாம் அரசியலுக்கு வருபவர்கள் தமக்கு என்ன லாபம் என்று பார்த்துத்தானே அரசியலுக்கே வருகின்றார்கள். கூட்டணி அமைப்பதில் குழப்பம் என்றால், அதன் பின்னால் 'பணநாயகம்' தான் காரணமாக இருக்கும். தமிழ் மக்கள் கூட்டணியின் மணிவண்ணனும், பசுமைக்கட்சியும்தான் சந்திரகுமார் கட்சியை காரணம்காட்டி கூட்டணிக்குள் வர விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. சந்திரகுமார் தனது இளவயதிலேயே தமிழ் ஈழக் கனவுகளுடன் ஆயுதங்களை தூக்கிக்கொண்டு போராடப்புறப்பட்டபோது மணிவண்ணன் பிறந்திருப்பாரோ தெரியவில்லை. பசுமைக்கட்சிக்காரர் மாணவர்களுக்கு ரியூட்டரி நடத்திக்கொண்டிருந்தார். ஆனால் சந்திரகுமார் ரியூட்டரிக்குச் செல்லாமல் ஆயுதத்தை தூக்கிக்கொண்டு போராடச் சென்றவர். சந்திரகுமார் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்திலிருந்தபோது, அவரது கனவு தமிழ் ஈழம் மட்டும்தான். இடையில் அவர் அதிலிருந்து பிரிந்து ஈ.பி.டி.பி.யில் இருந்தவர் என்பதால் அவரது தமிழ் தேசிய உணர்வை கொச்சைப்படுத்துவது சரியாகாது. தனித்து கேட்டால்தான் 'அதனை' பார்க்கலாம் என்று தனித்துத் தனித்து போட்டியிடுவதன் மூலம் தேசியக் கட்சிகளிடம் உள்ளூராட்சி சபைகளை பறிகொடுப்பதற்கு உதவுவதை விட, துரோகமான வேலையை சந்திரகுமார் செய்திருக்கமாட்டார்.

---

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** வடக்கு மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு மற்றும் சிந்தனை மாற்றம் ஆகியவற்றுக்கான சிறந்த திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறான திட்டங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிப் போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜெயவர்தன தெரிவித்திருக்கிறாரே. அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரி கின்றதா?. வடக்கு மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட் டுக்கு சிறந்த திட்டங்கள் இந்த வரவு - செலவுத்திட்டத் தில் இருக்கின்றது என்கிறாரா? அல்லது இனி சேர்த்தால் ஆதரிப்பேன் என்கிறாரா?



**வியுக்தியார்:** ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் காலத்தில் புனர்வாழ்வுக்கு பொறுப்பான அமைச்சராக இருந்து வடக்கு மக்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்த டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனவின் புதல்வர் அவர். அவர் இந்த வரவுசெலவுத்திட்டத்தில் இருந்திருந்தால், அதனை ஆதரித்தல்லவா இருக்கவேண்டும். அவர் தான் இந்த அரசின் வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பில் எதிர்த்தல்லவா வாக்களித்திருக்கிறார். அப்படியெனில் அதில் இல்லை என்றும் இனி சேர்க்க வேண்டும் என்றும்தான் சொல்கிறார் என்று நினைக்கின்றேன். ஆனால், நமது செல்வம் எம்.பியோ, இந்த வரவுசெலவுத்திட்டம் சாதாரண மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பதால்தான் தான் அதனை ஆதரித்தேன் என்கிறாரே. முதலில் காவிந்த ஜெயவர்த்தன நமது செல்வம் எம்.பி.யிடம் கேட்டு விசயங்களை தெரிந்துகொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய நாடுகளுக்கு 25% வரி: அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் கோரும் ஜேர்மனியின் புதிய வலதுசாரி அரசு !

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஐரோப்பிய ஒன்றியம் மீது 25 சதவிகித வரி விதிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை பல ஐரோப்பிய நாடுகள் கடுமையாக எதிர்க்கின்றன.

ஜேர்மனியில் நடந்து முடிந்த 2025 தேர்தல் முடிவுகளில் இருந்து வலதுசாரிகளின் ஆதரவு பாரியளவு அதிகரித்ததை காணக்கூடியதாக உள்ளது. போருக்குப் பிந்தைய ஜேர்மன் வரலாற்றில் இது ஒரு திருப்பு முனையாகும்.

கனடா, மெக்சிகோ மீது விதிக்கப்பட்டுள்ள வரி விதிப்பு ஏப்ரல் 2ம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார். அதேவேளை ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கார்கள் மற்றும் இதர பொருட்களுக்கு 25 சதவிகித வரி விதிப்பை புதிதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் 2ம் திகதி முதல் புதிய வரி விதிப்பு அமுலுக்கு வருவதாக குறிப்பிட்ட டொனால்டு ட்ரம்ப், பெரும்பாலான பொருட்கள் மீது வரி விதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த அறிவிப்பால் கனேடிய டொலர் மற்றும் மெக்சிகன் பெசோ மற்றும் கிரீன்பேக்கின் மதிப்பில் உயர்வைத் தூண்டின. மேலும் வரி விதிப்பு விவகாரத்தில் நிர்வாக உத்தரவுக்கு ட்ரம்ப் ஒப்புதல் அளிக்கும் வரையில் கருத்து தெரிவிக்க வேண்டாம் என்று கனேடிய அமைச்சர் பிராங்கோ பிலிப் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஐரோப்பிய ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், சுதந்திரமான மற்றும் நியாயமான வர்த்தகத்திற்கான நியாயமற்ற தடைகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் உறுதியாகவும் உடனடியாகவும் செயல்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியம் உலகின் மிகப்பெரிய சுதந்திர சந்தையாகும். இது அமெரிக்காவிற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதையும் மறுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய வரி விதிப்பால் ஐரோப்பா மற்றுமின்றி அமெரிக்காவும் பொருளாதார ரீதியாக பின்னடைவை எதிர்கொள்ளும் என கூறப்படுகிறது.

தேர்தலில் வென்ற ஜேர்மனியின் புதிய அதிபரான தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரெட்ரிக் மெர்ஸ் அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெறவேண்டும் என புதிய கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஜெர்மனி பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சி படு



தோல்வியடைந்துள்ள நிலையில் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் சிஎஸ்யு - சிடியு அணி வெற்றி பெற்றுள்ளது. ஜேர்மனியின் புதிய அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரெட்ரிக் மெர்ஸ் கூறுகையில், அமெரிக்கா ஐரோப்பிய கண்டத்தின் தலைவிதி குறித்து பெருமளவிற்கு அலட்சியமாக உள்ளது என தெரிவித்துள்ளதுடன் ஐரோப்பா சுதந்திரமாக வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் தேர்தலில் அமெரிக்காவின் தலையீட்டையும் அவர் கண்டித்துளார். ஐரோப்பாவை வலுப்படுத்துவதே எனது மிகவும் முன்னுரிமைக்குரிய விடயம் என தெரிவித்துள்ள அவர், இதனை கூடியவிரைவில் செய்யவேண்டும், அமெரிக்காவிடமிருந்து படிப்படியாக நாங்கள் சுதந்திரத்தை பெறலாம் என குறிப்பிட்டுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு, தீவிர வலதுசாரி ஏஎவ்டி கட்சியும், கூட்டணி ஆட்சி அமைக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது உலகப் போருக்குப் பிந்தைய ஜெர்மனியின் என்பது பல ஆண்டு கால வரலாற்றில் இதுவே முதல் முறையாக வலதுசாரிகள் மிகப்பெரும் சாதனை வளர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக ஜெர்மனியில் அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் உருவாக்கிய கட்சிகள், எப்போதும் மைய - இடது அல்லது மைய - வலதுசாரியாகவே இருந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் ஜேர்மனியின் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன. ஐரோப்பிய ஒன்றியத்தில் அமெரிக்க ஆதரவு குறைவடையும் நிலையில் தற்போது ஜேர்மன் அதிபர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட பிரெட்ரிக் மெர்ஸ் வெற்றி பெற்றுள்ளார்.

இரண்டாம் உலக போருக்கு பின்னர் ஜேர்மனியின் வலதுசாரி அரசியல் எழுச்சியை மீண்டும் இந்த தேர்தலில் காணக் கூடியதாக உள்ளது. அத்துடன், புலம்பெயர்தல் எதிர்ப்பு தீவிர வலதுசாரிக் கட்சியும் (ஏஎவ்டி)எதிர்பார்த்தது போலவே இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

நடந்து முடிந்த தேர்தலில் ஜேர்மன் அதிபர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட பிரெட்ரிக் மெர்ஸின் சிடியு-சிஎஸ்யு கூட்டணி கட்சி, 208 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அக்கட்சி 28.6 சதவிகித ஆதரவைப் பெற்றுள்ளது.

பல மனித உரிமை அமைப்புகள் உற்று நோக்கிய புலம்பெயர்தல் எதிர்ப்பு கட்சியான ஏஎவ்டி151 ஆசனங்கள் பெற்றுள்ளது. அக்கட்சி 20.8சதவிகித ஆதரவைப் பெற்றுள்ளது.

தற்போது ஆட்சியில் இருந்த ஜேர்மன் அதிபரான ஓலாஃப் ஷோல்ஸின் எஸ்டிபி கட்சிக்கு 121 ஆசனங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அக்கட்சி 16.4 சதவிகித ஆதரவை மட்டுமே பெற்றுள்ளது.

இதேவேளை ஆட்சியில் இடம்பெற்ற பசுமை கட்சிக்கு 85 ஆசனங்களும், டி லிங்கே கட்சிக்கு 64 ஆசனங்களும் , பிஎஸ்சட் கட்சிக்கு 5 ஆசனங்களும் கிடைத்துள்ளன.

தற்போது வெற்றி பெற்ற 69 வயதான திரு பிரெட்ரிக் மெர்ஸ் தலைமையின்கீழ் செயல்பட இருக்கும் கூட்டணியில் தீவிர வலதுசாரி கட்சியான ஏஎஃப்டியும் இடம்பெற உள்ளது. அக்கட்சி தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

ஏஎஃப்டி கட்சியுடன் திரு மெர்ஸ் நீண்ட, சவால் மிக்க பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார் என்று நம்பப்படுகிறது. இந்நிலையில், ஐரோப்பாவில் அமெரிக்காவின் ஆதிக்கத்தைக் குறைக்க செயல்பட இருப்பதாகத் திரு மெர்ஸ் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளிலேயே ஜெர்மனிதான் ஆகப் பெரிய பொருளியலைக் கொண்டுள்ளது. தற்போது அந்நாட்டின் பொருளியல் பலவீனமாக உள்ளது.

ஜெர்மனியின் பொருளியலை மேம்படுத்தும் பொறுப்பு முதல்முறையாகப் ப பதவி வகிக்க இருக்கும் திரு மெர்சுக்கு உள்ளது. மேலும், குடியேறிகள் தொடர்பாகவும் ஜெர்மானியர்களிடையே மாறுபட்ட கருத்து நிலவுகிறது.

குடியேறிகள் தொடர்பாக அந்நாட்டைச் சேர்ந்த பலரிடமிருந்து அதிருப்திக் குரல்கள் எழுந்துள்ளன. இந்த விவகாரத்துக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் திரு மெர்சுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கும் சீனா மற்றும் ரஷ்யாவின் நிலைப்பாட்டுக்கும் இடையே ஐரோப்பிய நாடுகள் சிக்கித் தவிப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்த நிலையையும் திரு மெர்ஸ் சமாளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

# ட்ரம்ப் ஆதிக்கத்தால் அதிரும் உலகம்!

ராம்



மனித குலத்துக்கே மிகவும் அழிவுகரமான முடிவை எடுக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்த இடத்தில் இருக்கிறார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப். அவரது தலைமையில் இயங்கும் அமெரிக்கா நினைத்தால் உலகின் எந்த நாட்டின் தலைவிதியையும் மாற்ற முடியும் என்ற அளவுக்கு பலம் வாய்ந்த நாடாக திகழ்கிறது. எனவே, ட்ரம்ப்பின் கருத்துகளையும், பேச்சுகளையும் அவ்வளவு எளிதில் யாரும் புறந்தள்ளிவிட முடியாது. அமெரிக்கா உலக அரங்கில் புறக்கணிக்க முடியாத அளவுக்கு பெரிய நாடாகவும் உள்ளது. அதன் புவியியல் பரப்பளவு 9.53 மில்லியன் சதுர கிலோ மீட்டர்கள். இது உலகின் மொத்த நிலப்பரப்பில் 6.4 சதவீதம் என்றாலும், இந்தியாவை விட மூன்று மடங்கு பெரியது. பிரிட்டனைவிட 40 மடங்கு மற்றும் ஜெர்மனியை விட 27 மடங்கு பெரியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த புவி பரப்பளவு அளவீட்டை விட முக்கியமானது அமெரிக்காவின் பொருளாதார பலம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி). உலக வங்கியின் தரவுகளின்படி, 2023 அமெரிக்க பொருளாதார மதிப்பு 27.72 டிரில்லியன் டொலராகும். ஒட்டுமொத்த உலகின் பொருளாதார மதிப்பு 106.17 டிரில்லியன் டொலர்.

உலக மக்கள்தொகையில் 4 சதவீதம் பேரை மட்டுமே கொண்டுள்ள நாடு, பொருளாதாரத்தில் 25 சதவீதத்துக்கு மேல் பங்களிக்கிறது. 2020 கணக்கெடுப்புப்படி அமெரிக்க மக்கள்தொகை சுமார் 33 கோடியாகும். இதில் இந்திய மக்கள்தொகையில் சுமார் நான்கில் ஒரு பங்கு ஆகும்.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனா 17.79 டிரில்லியன் டொலர் மதிப்புடன் மிகப்பெரிய பொருளாதார நாடாக இருந்தாலும், அமெரிக்காவை விட 4 மடங்கு அளவுக்கு மக்கள்தொகையைக் கொண்டுள்ளதால் அதன் தலா வருமானம் குறைவாக உள்ளது.

அமெரிக்காவைவிட தலா வருமானம் அதிகம் இருக்கும் நாடுகளும் சில இருக்கலாம். ஆனால், அமெரிக்காவின் பொருளாதார பலத்துடன் அவற்றை ஒப்பிட முடியாது. உதாரணமாக, 6.45 லட்சம் மக்கள்தொகை மற்றும் 2,586 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட லக்ஸம்பர்க், அதிகபட்ச தனிநபர் வருமானத்தைக் கொண்டுள்ளது. ஆனால் அதன் மொத்த பொருளாதார மதிப்பு 81.2 பில்லியன் டொலர்கள் மட்டும்தான். இது இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் நிகர சொத்து மதிப்பான 120 பில்லியன் டொலர்களை விட, 40 பில்லியன் டொலர்கள் குறைவு. மற்றொரு குறிப்பிடத்தக்க பொருளாதாரப் புள்ளிவிவரம் என்னவென்றால், உலக அந்நியச் செலாவணி கையிருப்பில் அமெரிக்க டொலரின் பங்கு சுமார் 58 சதவீதம் ஆகும். இது 20 ஆண்டுகளுக்கு முன்பு 70 சதவீதமாக இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, உலகளாவிய 'ஃபயர் பவர்' (ராணுவ பலம்) குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு 800 பில்லியன் டொலருக்கு மேல் ராணுவத்துக்காக செலவிடுகிறது. 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி உலக அளவில் ராணுவத்துக்காக செலவிடப்படும் நிதியில் 39 சதவீதம் அமெரிக்காவின் பங்காக உள்ளது. அமெரிக்கா வெளிநாடுகளில் இருந்து ராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்யும் நாடல்ல. ஆயுத உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றதுடன், மிகப்பெரிய ஆயுத ஏற்றுமதியாளராகவும் திகழ்கிறது. ஆனால், 80 நாடுகளில் 750 இடங்களில் அமெரிக்க ராணுவ நிலைகள் உள்ளன. இது நேட்டோ அமைப்புடன் கூடிய உடனடி பதிலடி நடவடிக்கைகளுக்கான தளங்களாகும்.

5,000இற்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் அமெரிக்காவில் உள்ளன. உலக அணு ஆயுதங்களில் 88 சதவீதத்துக்கு மேல் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிடம் உள்ளது. இதில் அமெரிக்காவின் பங்கு பாதிக்கு மேல் உள்ளது. இவைதான் அமெரிக்கா எவ்வித ஐயத்துக்கும் இடமின்றி உலகின் முதன்மையான வல்லரசு நாடாக திகழக் காரணம்.

அதே நேரத்தில், அந்நாடு சமத்துவம், சகோதரத்துவம், மனிதநேயம், உலக அமைதி ஆகிய அதன் அடிப்படைக் கொள்கைகளை மறந்து அதன் ஆணவத்துக்கு இடம் கொடுத்தால் அது உலகுக்கு மட்டுமின்றி, அந்நாட்டு மக்களுக்கும் ஆபத்தாக முடியும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் செயல்பாடுகள் அச்சமூட்டுவதாக உள்ளது. அவரது நிர்வாகம் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களைக் கையாளும் விதம், அவர் வசமுள்ள கட்டுப்பாடற்ற அதிகாரத்தின் மனிதாபிமானமற்ற மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்காவே புலம்பெயர்ந்தோரால் உருவான நாடுதான். பூர்விக அமெரிக்கர்கள் அந்நாட்டு மக்கள் தொகையில் 2 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளனர். எனவே, அந்நாட்டின் வரலாற்றின்படி, குற்றப்பின்னணி இல்லாத புலம்பெயர்ந்தோரிடம் அனுதாபம் காட்டுவதுடன், அவர்களை மனிதாபிமான முறையுடன் கையாள வேண்டும்.

ஆனால் ட்ரம்ப்பின் தேர்தல் வாக்குறுதியானது, அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் அனைவரையும் அதாவது சுமார் 1.2 கோடி மக்களை வெளியேற்றுவதாக இருந்தது. அவர்களில் பெரும்பாலோர் மத்திய அமெரிக்கா மற்றும் மெக்ஸிகோவிலிருந்து வந்தவர்கள். மற்ற நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளை அமெரிக்க நிர்வாகம் எவ்வாறு

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கண் மருத்துவமனையில் நோயாளர்கள் அசௌகரியம்!

கொழும்பு, மார்ச்.02

தேசிய கண் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக வரும் நோயாளர்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதுடன், பெரும் சிரமத்துக்கு மத்தியில் சிகிச்சைகளைப் பெறுவதாக நோயாளர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நாட்டிலுள்ள ஒரேயொரு தேசிய கண் மருத்துவமனை கொழும்பு மருதானை டீன்ஸ் வீதியில் அமைந்துள்ளது. நாளாந்தம் பெருமளவான நோயாளர்கள் வெளியூர்களில் இருந்து கண் நோய்க்கான சிகிச்சைகளை பெறுவதற்காக இங்கு வருகின்றனர்.

அவ்வாறு மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மாதாந்த சிகிச்சைப் பிரிவுக்கு வருகை தரும் ஏராளமான நோயாளர்களுக்கான இடவசதி போதுமானதாக இல்லை. நோயாளர்கள் இதனால் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

மருத்துவமனை நிர்வாகத்தினர் முதற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து அதிகாரிகளும் இது தொடர்பில் அவதானம் செலுத்தியதாகத் தெரியவில்லை. நாளாந்தம் இவ்வாறான தொரு சிரமமான நிலையில் பொதுமக்கள் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்கின்றனர்.

அதிகாலை 04.00 மணியிலிருந்தே வெளிநோயாளர் பிரிவுக்கு நோயாளர்கள் வருகை தருவதை காணக் கூடியதாகவுள்ளது. நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தே அவர்கள் சிகிச்சைகளை பெறுகின்றனர்.

அவ்வாறு பல சிரமங்களுக்கு மத்தியில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் மருத்துவமனையினுள் முறையாக நடத்தப்படுவதில்லை என நோயாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். நோயாளர்கள் முறையாக வரிசைப்படி மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்பப்படுவதில்லை.

வெளிநோயாளர் பிரிவில் பரிசோதனை நடத்தும் மருத்துவர்கள் மிகவும் பொறுமையாக நோயாளர்களுடன் கனிவாக நடந்து கொள்கின்ற னர். அவர்களின் சேவையில் எந்தவித மான குறையும் கூறுவதற்கில்லை எனவும், அவர்கள் தமது பணியை மிகவும் பொறுப்புடன் மேற்கொண்டு வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (எ)

# புதிய கடவுச்சீட்டில் பெரும் குறைபாடு!

கொழும்பு, மார்ச்.02

அரசாங்கம் தற்போது விநியோகிக்கும் புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டில் பெரும் குறைபாடுகள் உள்ளன. பழைய கடவுச்சீட்டுக்கு செலவழித்ததைவிட மேலதிகமாக 6, 997 ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்களின் செலவு தலைப்புக்களின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகிப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்னை இன்றும் தொடர்ந்து வருகிறது. கடந்த அரசாங்க காலத்தில் இந்தப் பிரச்னை ஏற்பட்டாலும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 5 மாதங்கள் கடந்துள்ள போதும் இந்தப் பிரச்னை தொடர்ந்து செல்கிறது எனவும் முஜிபுர் எம். பி. தெரிவித்தார். (எ)

# 2 லீற்றர் கசிப்புடன் பெண் கைது

கல்முனை, மார்ச்.02

வீதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய பெண்ணிடமிருந்து சம்மாந்துறை பொலிஸாரால் 2 லீற்றர் கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கடந்த 27 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அலவக்கரை வீதியில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

மேலும், கைதான வீரமுனை பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. (எ-01)

# இந்து சமுத்திர பிராந்தியத்தில்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புகிறது? பதில் நிச்சயமாக, சீனாவின் பொருளாதார நன்மைக்காக அல்ல. இந்தியாவின் முக்கிய மூலோ பாய முதலீட்டுத் திட்டங்கள் பல இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை தளமாகக் கொண்டே முன்னெடுக்கப்பட வுள்ளன. இந்தப் பின்னணியில், இந்த மாகாணங்களில் தனது நுழைவுக்கான துவாரங்களை சீனா தேடுகிறது.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் என்பவை, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடமாக அடையாளப் படுத்தப்பட்டிருப்பவை. இங்கு வாழும் தமிழ் மக்கள், இன, மொழி மற்றும் கலாச்சார ரீதியாக தென்னிந்தியாவுடன் பின்னிப்பிணைந்த உறவுகளைக் கொண்டவர்கள். இந்தப் பின்புலத்தில், ஈழத் தமிழர்களின் சர்வதேச தொடர்பு என்பதில் எப்போதுமே, இந்தியாதான் முதன்மையானதாக இருந்திருக்கின்றது. ஈழ மக்களின் கவனமும் இந்தியாவைச் சுற்றித்தான் இருந்திருக்கின்றது. இந்த யதார்த்தத்தை சீனா நிச்சயமாக குறைத்து மதிப்பிடாது. இருப்பினும், இந்த நிலைமை மாற்றமடை முடியாத ஒன்றல்ல என்றும் சீனா கருத இடமுண்டு. அவ்வாறு சீனா கருதினால் அது தவறானதும் அல்ல. இந்த பின்னணியில் சிந்தித்தால், இந்தியா, இந்த நிலைமையை மிகுந்த தீவிரத்துடன் அணுகுவது கட்டாயமானதாகும்.

(மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையத்தின் பணிப்பாளர் யதீந்திராவினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை www.eurasiareview.com தளத்தில் பிரசுரமாகியிருந்தது. ஈழநாட்டுக்காக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.)

# அரசாங்கத்தின் மிகப்பெரிய...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது வெளியுறவு தொடர்பில் இலங்கையின் பிரச்சினைகளை கையாளுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளில் பெருமளவுக்கு மிதவாத அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது. வர்த்தக சமூகமாக இருந்தாலென்ன, வறிய மக்கள், சிவில் சமூகம் அல்லது பெரும்பான்மை, சிறுபான்மை இன, மத சமூகங்களாக இருந்தாலென்ன சமூகத்தின் சகல பிரிவுகளினதும் நலன்களை நிறைவு செய்வதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சி செய்கின்றது.

கிடைப்பதற்கு அரிதாக இருக்கின்ற வளங்களை மக்களின் தேவைகளுடன் சமநிலைப்படுத்துவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் உறுப்பினர்களிடம் தியாகத்தை வேண்டிநிற்கிறது. தனது உறுப்பினர்கள் அவர்களின் பதவிகளுக்கு உரித்தான வசதி வாய்ப்புக்களை நாடாமல் பெரும்பான்மையான மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை மனதிற் கொண்டு செயற்பட வேண்டும் என்று அரசாங்கம் கேட்கிறது.

அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்பினதும் இலங்கையில் ஜனாதிபதி திசாநாயக்வினதும் ஆட்சிமுறைப் பாங்குகளுக்கு இடையிலான வேறுபாடு ஜனநாயக தலைவர்கள் பின்பற்றக்கூடிய வேறுபட்ட பாதைகளை தெளிவாக வெளிக்காட்டுகிறது. ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை தீர்க்கமான முறையில் மாற்றி வடிவமைக்க முயற்சிக்கிறார். அரசாங்க திணைக்களங்கள் முழுவதையும் இல்லாதொழிக்கவும் பாரம்பரியமான ஆட்சிமுறைக் கட்டமைப்புக்களை முழுமையாக மாற்றவும் அவர் முயற்சிக்கிறார்.

ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் கீழ் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதிப்பாட்டைப் பேணுகின்ற அதேவேளை, பொருளாதாரச் சவால்களையும் ஆட்சிமுறைப் பிரச்சினைகளையும் கையாளுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் சகல தரப்புகளையும் அரவணைக்கின்றதும் பெருமளவுக்கு சமநிலையானதுமான பாதையில் செல்வதில் நாட்டம் காட்டுகிறது.

ஊழல் மற்றும் கடந்தகால குற்றச் செயல்கள் போன்ற பிரச்சினைகளைக் கையாளும்போது தேவையான இடங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் கடுமையாக நடந்து கொள்கிறது. அதேவேளை, சமுதாயத்தில் பிளவுகளை ஏற்படுத்தாமல், நிலைபேறான மாற்றத்துக்கு அவசியமான கருத்தொருமிப்பை பெறுவதில் நாட்டத்தைக் காட்டுவதன் மூலம் ஒரு அரசாங்கத்தினால் மக்கள் ஆணையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அவர்கள் இலங்கையர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் காண்பிக்கின்றார்கள். அவர்களை ஆதரிக்க வேண்டியது அவசியமாகும்.

# ட்ரம்ப் ஆதிக்கத்தால்....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையாளப் போகிறது என்பதை அதன் நட்பு நாடான இந்தியாவுக்கு நாடு கடத்திய விதத்தை பார்த்த பிறகு ஊகிப்பது கடினம் அல்ல.

சட்டவிரோத குடியேறிகளால் ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தடுப்பது, போதைப்பொருள்கள் அமெரிக்காவுக்குள் நுழையாமல் தடுப்பது என்ற பெயரில் பல்வேறு அவசரகால நடவடிக்கைகளை ட்ரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் முக்கிய வர்த்தக நாடுகளான சீனா, கனடா, மெக்ஸிகோ மீது கடுமையான இறக்குமதி வரி உயார்வை அறிவித்தார். அமெரிக்கா வர்த்தகப் பற்றாக்குறையில் உள்ளது. இதனை சரி செய்வதற்கே இந்த நடவடிக்கை என்று விளக்கினார்.

ஆனால், இறக்குமதி வரி உயர்வால் அமெரிக்காவில் கடுமையான விலைவாசி உயர்வு ஏற்படும் என்பதை புறந்தள்ளிவிட்டு, ஏற்றுமதி நாடுகளுக்கு நெருக்கடி அளிக்கவே முயற்சித்தார். சீனா மீதான இறக்குமதி வரி உயர்வு நடைமுறைக்கு வந்துவிட்ட நிலையில், மெக்ஸிகோ, கனடா மீதான நடவடிக்கை ஒரு மாதத்தில் தொடங்கும் என்று தெரிகிறது.

இதன் தாக்கம் அமெரிக்காவில் மட்டும் எதிரொலிக்காமல், பிற நாடுகளையும், உலக வர்த்தகத்தையும் பாதிக்கும். 'உலகமே ஒரு குடும்பம்' என்பதை நாகரிக உலகம் விரும்புகிறது. ஆனால், 'அமெரிக்காவுக்கு முன்னுரிமை' என்ற ட்ரம்ப்பின் கொள்கை பிடிவாதமாகவே உள்ளது.

# பட்ஜெட் விவாதம்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய வனமுறைகளை ஜனாதிபதி நோக்கவில்லையா?

தேசிய பாதுகாப்பு என்பது தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதும் வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை தடுப்பதுமாக மாத்திரம் அர்த்தப்படாது. நாட்டு மக்கள் சுதந்திரமாக நடமாடமுடியாத அளவுக்கு பயங்கரமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடியதாக தீவிரமடைந்திருக்கும் துப்பாக்கி வன்முறைகளும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலே என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பாதாள உலக கும்பல்களுடன் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களும் வன்முறைகளும் திடீரென்று தோற்றம் பெற்றவை அல்ல. அதற்கு ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரம், பயங்கரமான ஆயுதங்களின் பெருக்கம் மற்றும் அரசியல் அனுசரணை ஆகியவற்றின் ஒரு கலவையே இன்றைய இந்த பயங்கரமான நிலைவரத்துக்கு காரணமாகும்.

கடந்த பல தசாப்தங்களாக, அரசாங்கங்கள் அரசியல் நோக்கங்களுக்காக பாதாள உலக குழுக்களை பயன்படுத்தி வந்திருக்கின்றன. பணபலமும் அடியாள் பலமும் சேர்ந்து அரசியலைக் குற்றச் செயல்மயமாக்கியிருப்பதுடன் குற்றச் செயல்களை அரசியல்மயமாக்கியிருக்கின்றன. இந்த விசச் சுழலில் இருந்து இலங்கையை விடுவிப்பது என்பது சுலபமான காரியம் அல்ல. குற்றச்செயலும் அரசியலும் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு தடவை பாடசாலை மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில், "மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையானவர்கள் நாளடைவில் அவற்றை தயாரிப்பதை தொழிலாகக் கொண்டு சொத்துக்களைக் குவித்து இறுதியில் பாராளுமன்றத்திற்குள்ளும் வந்துவிட்டார்கள்" என்று கூறியது நினைவுக்கு வருகிறது.

அவரின் ஆட்சிக் காலத்திலும் பாதாள உலக கும்பல்களுக்கு அரசியல் அனுசரணை இருந்தது.

ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கு பிறகு பதவிக்கு வந்த சகல ஜனாதிபதிகளின் ஆட்சிகளிலும் பாதாள உலக கும்பல்கள் அரசியல் அனுசரணையுடன் செயற்பட்டன. கொலை, பாலியல் வல்லுறவு, பணம்பறிப்பு போன்ற குற்றச்செயல்களுக்காக சிறைவாசம் அனுபவித்த பாதாள உலக பேர்வழிகளுக்கு ஜனாதிபதிகள் மன்னிப்பு வழங்கி விடுதலை செய்து சமாதான நீதிவான் பட்டமும் கொடுத்த வரலாறும் இருக்கிறது.

இனநெருக்கடியின் விளைவாக மூண்ட மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போரும் தென்னிலங்கையில் இரு ஆயுதக்கிளர்ச்சிகளும் சமூகத்தில் ஆயுதங்கள் பரவலாக புழக்கத்தில் இருப்பதற்கு முக்கியமான காரணங்களாகும். வன்முறைகளை தூண்டிய அரசியல் கலாசாரத்தின் விளைவுகளையே இலங்கை இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை தோற்றுவிக்கப் போவதாக கூறிக் கொண்டு பதவிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி தற்போதைய நிலைவரத்தை எவ்வாறு கையாளப்போகிறது என்பதை அறிவதற்கு நாமெல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறோம். ஸ்ரீலங்காவை 'கிளீன்' பண்ணுவது சுலபமான வேலை அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்...

சங்கம் கடந்த வியாழக்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பு மற்றும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

இதனால் வைத்தியசாலைக்கு சென்ற நோயாளர்கள் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியாமல் திரும்பிச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவாரத்தைகளின்போது இணக்கம் காணப்பட்டது.

அதனால் மக்களின் நலன் கருதி, தமது பகிஷ்கரிப்பை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்போவதாக வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்தது. அதற்கமைய மருத்துவ சேவைகள் நேற்று முதல் வழமைக்குத்திரும்பின.

## புதிய...

கடந்த காலங்களில் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் கருத்துரைத்த அரசாங்கம் தற்போது அது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி ஆரம்ப காலங்களில் அதிகாரப் பகிர்வை எதிர்த்திருந்தது.

தற்போதும் அதே நிலையில் உள்ளதா? என்ற சந்தேகம் எழுகிறது.

குறித்த சந்தேகத்தை நீக்கி, அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையை சிங்கள, பௌத்த நாடு என மட்டுப்படுத்த வேண்டாம்.

இது தமிழ், சிங்களம், முஸ்லீம் என அனைத்து இன மக்களும் வாழும் நாடாகும்.

அரசியலமைப்பு விடயம் தொடர்ந்தும் தாமதமடைந்து வருகின்றது. அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வகையில் புதிய அரசிய லமைப்பைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புதிய அரசியலமைப்பில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரச கரும மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும்.

அதேநேரம் சகல அரச நிறுவனங்களிலும் இரு மொழிகளிலும் மக்கள் சேவையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி ஏற்படுத்தப்படவேண்டும்-என்றார். (அ)

## தமிழ்த் தேசிய...

செல்வம் அடைக்கலநாதனுடன் நிர்ணயித்திருந்தோம்.

எனினும் அந்த முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது, தாங்கள் எமது கட்சியைத் தவிர்த்து வேறு ஒரு கூட்டணியை கடந்த 23 ஆம் திகதி உருவாக்கியமை ஏமாற்றம் அளிப்பதாகவும் கவலை அளிப்பதாகவும் அமைந்தது.

இது எமக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியமை, இயல்பானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

நாம் இந்த முயற்சியை மேற்கொண்டமை தனிய தேர்தலுக்காக அல்ல.

எமது முயற்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய இந்த நான்கு கட்சிகளும், தமிழ் இனத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற நோக்கத்துடனே ஆகும் என்பதை மீண்டும் பதிவு செய்கிறேன்.

இந்த முயற்சியை மேலும் தொடரவே விரும்புகிறேன்.

இதற்கான தங்களது இணக்கம் இருக்குமானால், நாம் தொடர்ந்து பேசலாம்.

நாம் தனித்து போட்டியிட்டாலும், தேர்தலுக்குப் பின் இணைந்து, வடக்கு-கிழக்கில் உள்ள சகல தமிழ் உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களையும் நாம் கைப்பற்றும் முகமாக தேர்தலுக்குப் பின் செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்றை, தேர்தலுக்கு முன்னரே ஏற்பாடு செய்தல்.

இதற்கும் தங்களது உடன்பாடு இருக்கும் என்றால், நாம் தொடர்ந்து பேசலாம் - எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## அதானி...

தெரியவருகிறது.

கோடீஸ்வரர் கௌதம் அதானி தலைமையிலான அதானி கிரீன் எனர்ஜி, மன்னார் மற்றும் பூனகரியில் உள்ள இரண்டு 484 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி காற்றாலைகளை புதுப்பிக்க புதிய ஒப்பந்தங்களை கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் மேற்கொண்டிருந்தது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த மாதம் குறைந்த கட்டணத்தைக் கோரியதை அடுத்து, இரண்டு காற்றாலை மின் திட்டங்களிலிருந்து வெளியேறுவதாக அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் அறிவித்தது.

எனினும் இலங்கை அரசாங்கத்துடன் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும், அவர்கள் விரும்பினால் எதிர்கால ஒத்துழைப்புக்கு தயாராகவுள்ளதாகவும் அதானி நிறுவனம் கூறியிருந்தது.

இந்த நிலையிலேயே இத்திட்டத்தின் எதிர்காலம் குறித்த தனது நிலைப்பாட்டை எழுத்துபூர்வமாக தெரிவிக்குமாறு இலங்கை அரசாங்கம் அதானி குழுமத்திடம் கோரியுள்ளது. (அ)

## நாணய...

வசதியாக 336 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி 1.34 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் அதிகரித்துள்ளது.

இலங்கையின் செயல்பாடு இந்தத் திட்டத்தின் கீழ் வலுவாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

சமூகச் செலவினங்களுக்கான சுட்டெண் இலக்கைத் தவிர, 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிக்கான ஏனைய அனைத்து அளவு இலக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில், பல கட்டமைப்பு அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன அல்லது தாமதத்துடன் செயல்படுத்தப்பட்டுள்ளன. சமீபத்தில் நிறைவு செய்யப்பட்ட கடன் மறுசீரமைப்புப் பணிகள், கடன் நிலைத்தன்மையை உருவாக்குவதற்கான பாதையில் வெற்றிகரமான முடிவாக உள்ளன என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## குழப்பத்தை...

200 லீற்றர் எரிபொருளுக்கான முன்பதிவு செய்யப்படுகிறது.

எனினும் தற்போது அதனைவிட அதிகமாக முன்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் திட்டமிட்ட வகையில் ஒருசில விநியோகத்தர்கள் விநியோக நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளனர்.

மேலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சமூக வலைத்தளங்களில் ஒருசிலர் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

இதனால் குழப்பமான சூழ்நிலை உருவாகியது.

நாட்டில் மீண்டும் வரிசை யுகம் உருவாக்கப்பட்டுள்ளது என்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக திட்டமிட்ட வகையில் ஒரு சிலரால் இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருளை வழங்கும்போது அவை மூன்று வீத இலாபத்தை பெற்றுக் கொள்கின்றன.

அந்த பெருந்தொகை இலாபம் பொதுமக்களுடைய பணமாகும். ஆதலால் அதில் நியாயமான திருத்தத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது. அதற்கு எதிராகவே ஒரு சில விநியோத்தர்கள் திட்டமிட்ட வகையில் அரசாங்கத்துக்கு சேறுபூசும் விதமாக செயற்படுகின்றனர் - என்றார். (அ)

## வட்டுவாகல்...

ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் இதனைத் கூறினார்.

எனவே மடியில் கனமில்லையெனில் விகாரையை அகற்றி அகழ்வை மேற்கொண்டோ, நவீன முறையில் ஸ்கான் கருவிகள் மூலமோ ஆய்வுகளை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய அரசாங்கம் முன்வரவேண்டுமென இதன்போது நீதி அமைச்சையும் கோரினார்.

இதன்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி நீதியை வழங்குமாறும், அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம், அரச திணைகளங்கள் மற்றும், அரச படைகளால் தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படும் விவகாரங்கள் என்பவற்றுக்கும் நீதியை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நீதி அமைச்சைக் கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசு இதுவரை இனவாதம் பேசவில்லை. வரவேற்கின்றோம். தமிழர்கள் இந்த நாட்டில் ஒரு பலமான சக்தி. இதனை முழுமனதோடு ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் நாம் நீதி கேட்கின்றோம். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும். ஜனாதிபதியும் தனது நேற்றைய உரையில் குறிப்பிட்டிருந்தார். நடந்தால் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டும். நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிரவேறொன்றுமில்லை.

யுத்தம் மௌனிக்கப்பட்டபோது தமது உறவுகளை, குறிப்பாக கணவரை மனைவியும், மகன், மகளை பெற்றோரும் வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலய முன்றலில் ஒப்படைத்தார்கள். தடுப்பு முகாம்கள், கடல்எனப் பல இடங்களிலும் சரணடைந்தார்கள்.

வட்டுவாகலில் ஒப்படைக்கப்பட்டவர்களை கொக்குத்தொடுவாய் நோக்கியும், கேப்பாப்புலவு நோக்கியும், வட்டுவாகல் கடற்கரை நோக்கிய பாதையிலும் பஸ்களில் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

இலங்கைப் படையினரிடம்தான் ஒப்படைத்தோம். இன்னும் காணவில்லையே அவர்கள் எங்கே என்று தேடுகின்றார்கள். நீதிஅமைச்சரே நீதி தாருங்கள். நியாயப்படி நடந்து கொள்ளுங்கள்.

வட்டுவாகல் கடற்கரைப் பாதை நோக்கி பேருந்தில் ஏற்றிக்கொண்டு சென்றவர்களை விட்டு விட்டு பேருந்துகள் மட்டும் திரும்பி வந்ததாகவும் மக்கள் சொல்கின்றார்கள்.

வட்டுவாகல் தனித்தமிழ் சைவக் கிராமமாகும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் ஒரு பெரியவிகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்தவர்களை கொண்டுசென்று, படுகொலைசெய்து புதைத்துவிட்டு அதன்மேல் இவ்வாறு பெரியவிகாரை இங்கு அமைத்துவிட்டதாத மக்கள் கூறுகின்றனர். உங்களின் மடியில் கனமில்லை என்றால் இதனை நிரூபியுங்கள்.

விகாரையை அகற்றி ஆழமாகத் தோண்டுங்கள். அல்லது புதிய தொழில்நுட்ப முறையில் ஆழத்தில் இருப்பவற்றை அறியக்கூடியதான நவீன கருவிகளைப் பயன்படுத்தி உண்மையை வெளிப்படுத்துங்கள்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழிக்கும் நீதியைத் தாருங்கள். சில வேளை நீங்கள் நீதயைத்தரும்போது, நீதிபதி சரவணராஜா போல்தான் உங்களுககும் நீதி கிடைக்குமோ தெரியாது. ஆனால் இன்றைய அரசை நம்புவோம் - என்றார். (அ)

## எரிபொருள்...

மத்தியில் திரை நீக்கம் செய்து வைக்கும் புண்ணிய நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தத்தை எவ்வித கலந்துரையாடலும் இன்றி தற்போதைய அரசாங்கம் திடீரென நிராகரித்துள்ளமையால், தற்போது பெரும் எரிபொருள் வரிசை உருவெடுத்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தாலும், நாட்டை ஆள முடியா நிர்வாக திறனின்மையாலும் ஏற்பட்ட நெருக்கடியே இதுவாகும். பெருமளவிலான ஊழியர்கள் வேலை யிழந்து, பொருளாதாரம் பாதிக்கப்பட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூட நாட்டிற்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே,இந்த நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்படவேண்டும். இதனால் அழுத்தத்திற்கு உள்ளாவது ஜனாதிபதியோ, பிரதமரோ,அல்லது அமைச்சர்களோ அல்ல, சாதாரண மக்களே இதற்கு முகம் கொடுக்கின்றனர். எனவே, எரிபொருள் விநியோகஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உடனடியாக தீர்வுகளை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். - என்றார். (அ)

## மோடி...

மாநாட்டின்போது இடம்பெற்றுள்ளது.

புது டில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் சர்வதேச இராஜதந்திரிகளின் பங்கேற்புடன் மாநாடு இடம்பெற்றிருந்தது.

இதன்போது தெற்காசியா குறித்த சொற்பொழிவை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

மேலும், இந்தியாவின் முன்னணி தொழிலதிபர்கள் குழுவுடன் அவர் கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க இன்று ஞாயிற் றுக்கிழமை நாட்டுக்கு திரும்புவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேசபந்து...

கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு காலத்தில் அப்பாவுக்கும், சித்தப்பாவுக்கும் ஏற்றவகையில் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கவில்லை எனப் பிரதம நீதியரசராக இருந்த ஷிரானி பண்டாரநாயக்கவை வீட்டுக்கு அனுப்பினார்கள். வங்கித் தலைவர் ஒருவரை வரலாற்றில் முதல் தடவையாகப் பிரதம நீதியரசராக நியமித்தார்கள். நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையை இல்லாமல் செய்தார்கள். நீதியரசர்களை இந்த நாட்டில் அச்சுறுத்தினார்கள். அந்த நிலைமையை இந்த அரசாங்கம் மாற்றியுள்ளது.

2021 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த காலப்பகுதியிலேயே முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை இலங்கைக்கு அனுப்ப முடியாது எனச் சிங்கப்பூர் அரசாங்கம் தெரிவித்தது. 2021 ஆம் ஆண்டு கிடைத்த கடிதம் தொடர்பிலேயே இப்போது அனைவரும் கேள்வி எழுப்புகின்றனர். அர்ஜூன மகேந்திரனை கொண்டு வர இரு வாய்ப்புகள் இருக்கிறது. அதனைப் பயன்படுத்தி நாங்கள் இலங்கைக்கு அழைத்து வருவோம்.

இந்த நாட்டில் பொலிஸ் திணைக்களத்தைக் காட்டிக்கொடுத்து பொலிஸ்மா அதிபர் பதவியை ஒப்பந்தங்களுக்கு அடிமைப்படுத்திய ஒருவர் இப்போது தலைமறைவாகியுள்ளார். மாத்தறை நீதிமன்றம் அவரை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. இப்போது முன்னாள் பொலிஸ்மா அதிபர் தலைமறைவாகிவிட்டார். அவரைத் தேடிப் பிடிப்பதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# மழையால் யாழில் 10 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/166 கிராம சேவகர் பிரிவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்றும் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-05)

# தேங்காயின் விலை வழமைக்கு திரும்பும்

கொழும்பு, மார்ச் 02

மே மாதத்திற்குப் பிறகு தேங்காய் விலைகள் முந்தைய நிலைக்குத் திரும்பும் என்று தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

தேங்காய் இறக்குமதி செய்ய அனுமதி பெற்ற நிறுவனங்களின் உரிமையாளர்கள் அடுத்த சில நாட்களுக்குள் தொடர்புடைய இறக்குமதி நடவடிக்கைகளைத் தொடங்குவார்கள் என்று அதன் தலைவர் சாந்த ரணதுங்க தெரிவித்தார். (அ)

# எம்.பி. பதவியைப் பணத்துக்கு யாராவது விற்றால் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 02

உறுப்பினர் பதவியை யாராவது பணத்திற்கு விற்பனை செய்திருந்தால் அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த காலங்களில் ஊடகங்களுக்கு வெளியிட்டு வந்த கோப்புகளுக்கு என்னவாயிற்று என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியபோதே பிரதி அமைச்சர் பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துரைத்த போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சியினர் எங்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார்கள். எங்களிடம் நிறையக் கோப்புகள் இருந்தன. அவற்றை என்ன செய்தீர்கள் என வினவினார்கள். எங்களிடத்தில் கோப்புகள் இருந்தன. அவை அதிகாரமிக்க இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்னும் கோப்புகள் காணப்படுகின்றன. அவை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விடயங்களைச் சட்ட ரீதியாக உரிய நேரத்தில் சமர்ப்பிப்போம். அவர்கள் உறுப்பினர் பதவியைப் பணத்துக்கு விற்பனை செய்துள்ளார்களா? என்பது தொடர்பிலும் நாங்கள் விசாரணைகளை மேற்கொள்வோம் - என்றார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றிணைவு மக்கள் நலனென்றால் பங்களிப்பேன்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 02

**தமிழ் கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒன்றிணைந்து எதிர்கொள்வது தொடர்பில் பேசுவதற்கு உத்தியோபூர்வமாக எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் நலனுக்காக ஒன்றிணைய அழைப்பு விடுத்தால் எனது பங்களிப்பு நிச்சயமாயிருக்கும் என தெரிவித்தார்.**

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்களுக்கான போராட்டங்களைத் தலைமை தாங்கிய இயக்கங்களின் ஒன்றிணைவு தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்த கருத்து தொடர்பில் அவரிடம் கேட்ட போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் இன்றிலிருந்து இன்று வரை தமிழ் மக்களின் நலன் சார்ந்து எனது அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறேன் என்பது யாவரும் அறிந்த விடயம்.

தமிழ் மக்களின் அரசியல் அபிவிருத்தி மற்றும் அன்றாட பிரச்னைகளுக்கு தீர்வு காணுவதே எனது அரசியல் அவா.

துரதிஷ்டவசமாக பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்பு உரிய நேரத்தில் கிடைக்காத காரணத்தினால் மக்களுக்கான தீர்வை எட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

தற்போது உள்ளூராட்சித் தேர்தலை தமிழ் கட்சிகள் ஓரணியில் எதிர்கொள்வதா அல்லது தேர்தலின் பின்னர் ஓரணியில் செயல்படுவதா என்ற விவாதம் இடம்பெற்று வருகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலை தமிழ்க் கட்சிகள் எதிர்கொள்வது தொடர்பில் என்னுடன் சிலர் பேசினார்கள். அது நட்பு ரீதியாக இடம்பெற்றதே தவிர உத்தியோக பூர்வமாக பேசுவதற்கோ கலந்துரையாடுவதற்கோ எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பொறுத்தவரை தமிழ் மக்களின் நலன் சார்ந்து கட்சிகளுக்கிடையே ஒற்றுமை அல்லது ஒன்றிணைவு இருக்கவேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடு.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொங்கு சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆதரவை வழங்கியது. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் யாழ். மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்கி இம்மானுவல் ஆனல்ட் முதல்வர் ஆனார்.

அதேபோன்று யாழ்.மாநகர சபையில் விஸ்வலிங்கம் மணிவண்ணணுக்கு ஆதரவு வழங்கி அவரை முதல்வராக தெரிவு செய்வதற்கு உதவினோம்.

அதுமட்டுமல்லாது வேறு பிரதேச சபைகளிலும் மக்கள் நலன் சார்ந்த வரவு - செலவுத் திட்டங்கள் முன்வைக்கப்படும் போது அதைத் தோற்கடிக்காமல் வெற்றி பெறுவதற்கு எமது கட்சி பங்களிப்பை வழங்கியுள்ளது. தற்போது எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகிறோம்.

ஆகவே தமிழ் மக்களின் நலனுக்காக செயற்படும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மக்கள் நலனுக்கான ஒன்றிணைவு அவசியம் என கருதும் பட்சத்தில் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு தயாராக இருக்கிறேன் - என்றார். (அ-05)

# தாதியர்களின் சம்பள அதிகரிப்பு; சபையில் விளக்கினார் அமைச்சர்

கொழும்பு, மார்ச் 02

இம்முறை பாதீட்டில் அரச ஊழியர்களுக்கான அடிப்படை வேதனத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று பாராளுமன்றத்தில் இது தொடர்பில் கருத்துரைத்தார். தாதியர் சேவைக்காக அதிகரிக்கப்பட்ட வேதனம் தொடர்பில் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். அமைச்சர் இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கையில்-

தாதியர் சேவையில் மூன்றாம் தரத்தில் 8200 பேரளவில் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு 32,525 ரூபாய் மாத்திரமே அடிப்படை வேதனமாக வழங்கப்பட்டது. நாங்கள் 54, 920 ரூபாய் வரை அடிப்படை வேதனத்தை அதிகரித்துள்ளோம். அதன்படி, அடிப்படை வேதனம் 22,395 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஒரு மணித்தியாலத்திற்கான மிகை நேரக் கொடுப்பனவு 215 ரூபாயாக இருந்தது. அது 290 ரூபாய் வரை ஒரு மணித்தியாலத்துக்கு 75 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1,084 ரூபாய் நாளாந்த கொடுப்பனவு 1, 831 ரூபாய் வரை அதிகரிக்கும். முதலாவது நியமனம் கிடைத்து 05 வருடங்கள் பணியாற்றுபவர்களுக்கான வேதன அதிகரிப்பு பற்றியே நான் கூறுகின்றேன். அவர்களுக்கு ஏப்ரல் மாதத்திலிருந்து குறைந்தபட்சம் 133,640 ரூபாய் மொத்த வேதனமாகக் கிடைக்கும்.

இரண்டாம் தரத்திலுள்ள தாதியர்கள் 9,400 பேர் இருக்கின்றனர். நியமனம் பெற்று 5 வருடங்களின் பின்னர் இரண்டாம் தரத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கு அடிப்படை வேதனமாக 37, 636 ரூபாய் கிடைத்தது. அதனை 64,500 ரூபாய் வரை அதிகரித்துள்ளோம். அதாவது 26,864 ரூபாய் வரை அடிப்படை வேதனம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை மணித்தியாலத்துக்கு 255 ரூபாய் மிகை நேரக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அதனை 345 ரூபாய் வரை 90 ரூபாயால் அதிகரித்துள்ளோம். 1881 ரூபாயாக இருந்த நாளாந்த கொடுப்பனவு 2150 ரூபாயாக அதிகரிக்கப்படும். அப்போது அவர்களுக்கு மொத்த வேதனம் இன்னும் அதிகமாகும்.

முதலாம் தரத்தில் 16,000 பேர் வேலை செய்கிறார்கள். 12 வருடச் சேவைக்குப் பிறகு முதல் தரத்திற்கு உள்வாங்கப்படுவார்கள். அவர்களின் தற்போதைய அடிப்படை வேதனம் 44,965 ரூபாயாகும். இந்த அடிப்படை வேதனம் 77,850 ரூபாயாக அதிகரிக்கும். அதாவது அடிப்படை வேதனத்தில் 32,885 ரூபாய் அதிகரிப்பாகும். இப்போது, ஒரு மணித்தியால மிகை நேரக் கொடுப்பனவு 305 ரூபாயாக உள்ளது, இது 420 ரூபாயாக அதிகரிக்கும். ஒரு மணி நேரத்திற்கு மிகை நேரக் கொடுப்பனவு 115 ரூபாயாக அதிகரிக்கும். 2248 ரூபாயாக இருந்த நாளாந்த கொடுப்பனவு 2595 ரூபாய்வரை அதிகரிக்கும்.

உயர் தரத்திலுள்ள 6,000 தாதியர்கள் உள்ளனர். இந்த நபர்கள் 22 வருடச் சேவைக்குப் பிறகுதான் பதவி உயர்வு பெறுகிறார்கள். தற்போதைய அடிப்படை வேதனம் 53,035 ரூபாயாக உள்ளது. அது 92,460 ரூபாயாக அதிகரிக்கும். 350 ரூபாய் வழங்கப்படும் மணித்தியாலத்திற்கான மிகை நேரக் கொடுப்பனவு 500 ரூபாயாக உயர்வடைகிறது. 2,651 ரூபாயாக இருந்த நாளாந்த கொடுப்பனவு 3,082 ரூபாய் வரை அதிகரிக்கும்.

அதே போல தற்போது சுமார் 415 சிறப்புத் தர தாதியர்கள் உள்ளனர். சுமார் 27 வருடச் சேவைக்குப் பிறகு இவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது. இப்போது 54,235 ரூபாய் கிடைக்கிறது. இந்த அடிப்படை வேதனம் 94,060 ரூபாயாக அதிகரிக்கும். அவர்களுக்கான ஒரு மணி நேரத்திற்கு 395 ஆக இருக்கும் மிகை நேரக் கொடுப்பனவு 545 ரூபாயாக அதிகரிக்கும். நாளாந்த கொடுப்பனவு 2,711 ரூபாயிலிருந்து 3,135 ரூபாய் வரை அதிகரிக்கும் - என்றார். (அ)

# 7 துறைசார் மேற்பார்வைக் குழுக்களை பாராளுமன்றத்தில் அமைக்க இணக்கம்

கொழும்பு, மார்ச் 02

பத்தாவது பாராளுமன்றத்தில் ஏழு துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிப்பதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்தாவது பாராளுமன்றத்தில் ஏழு துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிப்பதற்கும் அவற்றில் மூன்று குழுக்களின் தலைமையை எதிர்க்கட்சிக்கும் நான்கு குழுக்களின் தலைமையை ஆளும் கட்சிக்கும் வழங்குவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இணக்கம் வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அண்மையில் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைய இவ்வாறு பத்தாவது பாராளுமன்றத்தில் அனைத்து அமைச்சுக்களினதும் விடயப் பொறுப்புக்கள் உள்ளடங்கும் வகையில் ஏழு துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பத்தாவது பாராளுமன்றத்தில் இயலாமையுடைய நபர்கள் தொடர்பில் செயற்படக் கூடிய பாராளுமன்ற ஒன்றியத்தை ஸ்தாபிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களான சுகத் வசந்த த சில்வா மற்றும் வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோர் விடுத்த கோரிக்கைக்கு குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org